# தமிழர் பொருண்மியம்

## வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 100/=

இதழ் - 72

25.08.2024




# இலங்கைப் பொருளாதாரத்திற்கு கைகொடுக்கும் நல்லூர் திருவிழா




வாழ வைக்கும் வாழை

02



தன்னம்பிக்கையை இழக்காத நம்பிக்கை மனிதன்

12




நம்மைச் சுற்றியிருப்பவர்களை முதலில் புரிந்துகொள்ளுங்கள்

22

# வாழ வைக்கும் வாழை

**உங்களது வாழைக்குலைகளை விற்பனைக்கென எடுத்து வரும் போது சந்தையின் வாசலில் வைத்துப் பெரும்பாலும் வியாபாரிகள் விலை கேட்பார்கள். அவர்களுக்குள் ஒரு இரகசிய ஒற்றுமை உள்ளது. ஒருவர் ஒருமுறை விலை கேட்டால் மற்றையவர் கேட்க மாட்டார். அடுத்து வருபவரிடம் அடுத்தவர் விலை கேட்பார். ஏனையவர்கள் விலை கேட்க மாட்டார்கள். அவ்வாறு ஒரு இரகசிய உடன்படிக்கை இருக்கும்.**

வேதநாயகம் தபேந்திரன்



இரசாயன மருந்து அடித்துப் பழுக்க வைக்காத தரமான வாழைப் பழங்களைச் சாப்பிட வேண்டும். இதற்கு என்ன செய்ய வேண்டும்.

ஒன்று. எமது வளவில் வாழை நட்டு வளர்த்து வாழைக்குலை வெட்டிச் சாப்பிடல் வேண்டும்.

இரண்டு வாழைத் தோட்டம் வைத்திருக்கும் ஒருவரிடம் சென்று வாழைக்குலை வாங்குதல் வேண்டும்.

மூன்று. நீர்வேலியில் பருத்தித்துறை வீதியில் பழைய கண்ணாடித் தொழிற்சாலை முன்பாக உள்ள நீர்வேலி ஐக்கிய வாழைக்குலை வியாபாரிகள் கூட்டுறவுச் சங்கத்தின் பொறுப்பில் இயங்கும் வாழைக்குலைச் சந்தைக்குச் செல்லுதல் வேண்டும்.

அங்கு அதிகாலை ஐந்தரை மணி முதல் காலை 10 மணி வரையில் வாழைக்குலைச் சந்தை படு சுறுசுறுப்பாக இயங்கும். அதிலும் காலை 6 மணி முதல் 08 மணி வரையில் தான் சந்தைக்கு நிறைய வாழைக்குலைகள் வந்து உச்சமாக இயங்கும்.

இயலுமானால் உங்களது வளவில் விளைந்த வாழைக்குலையைக் கூட விற்றுக் காசாக்கலாம்.

அல்லது உங்களது சொந்தத் தேவைக்கு அல்லது கோயில் திருவிழா ,விசேட உற்சவங்களுக்கு அல்லது உங்களது வீட்டுக் கொண்டாட்டத்துக்கு வாழைக் குலைகளை மொத்த விலை கொடுத்து வாங்கலாம்.

10 கிலோவுக்கு உட்பட்ட வாழைக்குலை ஆயின் வாழைக்குலையின் மொத்த நிறையில் 02 கிலோ தண்டுக்குக் கழிப்பார்கள். பத்துக் கிலோவுக்குக் கூடுதலாகவும் 20 கிலோவுக்கு உட்பட்டதுமாயின் தண்டுக்காக 03 கிலோ கழிப்பார்கள்.

இருபது கிலோவுக்கு மேலாயின் 04 கிலோ தண்டுக்குக் கழிப்பார்கள். டிஜிட்டல் தராசு வைத்துள்ளனர். அதனால் நிறைக் கணக்கில் பிசகு விட மாட்டார்கள்.

தண்டுக்குரிய நிறைகழித்த மொத்த விலையில் 4 வீதத்தைச் சந்தைக் குத்தகையாகக வாழைக்குலை விற்பவர் கொடுக்க வேண்டும். கொடுத்தவுடன் ஒரு சிறுதுண்டில் வாழைக்குலையின் மொத்த எடை என்ன? விலை,கொடுக்க வேண்டிய காசு போன்ற 03 விபரங்களையும் உள்ளடக்கி சிறுதுண்டு ஒன்றை வாழைக்குலை கூட்டுறவுச் சங்க உத்தியோகத்தர் தருவார்.

அதனை நாம் வியாபாரியிடம் கொடுக்க அவர் மறுபேச்சின்றி உரிய தொகையைத் தருவார்.

யாழ்ப்பாணத்திலுள்ள சந்தைகளில் மிகுந்த நாணயமான ஒரு சந்தையாக எனது அனுபவத்தில் நீர்வேலிச் சந்தையைக் காண்கின்றேன். ஏனைய சந்தைகளில் சில வியாபாரிகள் ஏனைய வியாபாரிகள் கேட்கும் தொகையை விடக் கூடக் காசு சொல்லி விவசாய விளைபொருள்களைத் தூக்குவார்கள். பின்னர் காசு தரும் போது சுத்துமாத்து விடுவார்கள்.

ஆனால் நீர்வேலி வாழைக்குலைச் சந்தையில் அந்தக் கதைக்கே இடமில்லை. அத்துடன் சீசீரிவி கமெராவும் பூட்டப்பட்டுள்ளது. அதனால் வாழைக்குலைத் திருட்டு என்ற விசயத்திற்கு இடமில்லை.

இந்தச் சந்தையில் வாங்கப்படும் வாழைக்குலைகள் யாழ்ப்பாணத்தின் ஏனைய இடங்கள், வட மாகாணம் உட்பட நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கு விற்பனைக்காக அனுப்பப்படுகின்றன. எம்மவர் வாழும் வெளிநாடுகளுக்கும் கூட அனுப்பப்படுகின்றன. நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வியாபாரிகள் பலர் வந்து இங்கு வாழைக்குலைகளைக் கொள்வனவு செய்கின்றனர்.

அவ்வாறு கொள்வனவு செய்யப்படும் வாழைக்குலைகள் மோட்டார் சைக்கிள், ஆட்டோ முதல் பட்டா வாகனங்கள், லொறிகள் வரையில் கூட ஏற்றப்பட்டு வெளி ஊர் களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. அதனால் சந்தையில் நல்ல விலை கிடைக்கும்.

உங்களது வாழைக்குலைகளை விற்பனைக்கென எடுத்து வரும் போது சந்தையின் வாசலில் வைத்துப் பெரும்பாலும் வியாபாரிகள் விலை கேட்பார்கள். அவர்களுக்குள் ஒரு இரகசிய ஒற்றுமை உள்ளது. ஒருவர் ஒருமுறை விலை கேட்டால் மற்றையவர் கேட்க மாட்டார். அடுத்து வருபவரிடம் அடுத்தவர் விலை கேட்பார். ஏனையவர்கள் விலை கேட்க மாட்டார்கள்.அவ்வாறு ஒரு இரகசிய உடன்படிக்கை இருக்கும்.

அதனால் நீங்கள் சந்தைக்கு வாழைக்குலை எடுத்துச்சென்றால் வாசலில் வைத்துக் கேட்கப்படும் விலைக் கேள்வி பெரும்பாலும் சரியாகவே இருக்கும். அதனை வைத்து முடிவு எடுக்கலாம்.

நீங்கள் உங்களது சொந்தத் தேவைக்கு வாழைக்குலை வாங்குவதாயின் சந்தை வாசலை அண்மித்து வைத்து விலைபேசி வாங்க வேண்டும். நீங்கள் சந்தைக்குப் புதியவர். பிறத்தி ஆள் என்றால் வியாபாரிகள் போட்டிக்கு மாறி மாறி விலை கேட்டு விலையை உச்சத்தில் ஏற்றி விட்டு நைசாகக்

கழன்று போய் விடுவார்கள். ஆகவே நீங்கள் அந்தச் சந்தர்ப்பத்தில் மிகவும் நிதானமாகவும் புத்தி சாதுரியத்துடனும் நடக்க வேண்டும்.

ஞாயிற்றுக் கிழமைகளில் தோட்டம் செய்யும் உத்தியோகம் பார்ப்பவர்கள் சந்தைக்கு அதிகம் வருவதனால் வாழைக்குலை பெரும்பாலும் மலிவாக இருப்பது வழக்கம். அதனால் ஞாயிற்றுக் கிழமைகளில் வாழைக்குலைகளை விற்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். உங்களது தேவைக்கு வாழைக்குலைகளை வாங்குவதனை வைத்துக் கொள்ளலாம்.

உங்களது வாழைத் தோட்டத்தில் வாழை மரத்தில் வைத்து வாழைச் சீப்புகள் இடைப்பழம் பழுக்க முன்னதாக அதனை வெட்டியெடுத்துச் சந்தையில் விற்பதனை உறுதி செய்து கொள்ளுங்கள். இவ்வாறான வாழைக்குலைகளுக்குத் தான் அதிக விலை கிடைக்கும்.

ஏனெனில் இந்தச் சந்தையில் விற்கப்படும் ஒரு வாழைக்குலை பலரது கைகளுக்கு மாறி வாழைப்பழத்தை உண்பவர்கள் கைகளுக்குச் செல்ல ஒருவாரம் பிடிக்கும். அதனால் அதற்கேற்ற தரத்திலுள்ள குலைகளை அதிக விலை பெறும்.

வாழைக்குலையின் சீப்புகளில் மேற்சீப்பில் பூக்கள் உதிர ஆரம்பிக்கும் நிலை அவ்வாறு விற்பதற்குத் தகுந்த



தருணமாகும். இடைப்பழம் ஒன்றிரண்டு பழுத்தால் கூட அகலம் குறைந்த நீண்ட கூரான கத்தியால் அதனை வெட்டிய பின் சந்தைக்கு எடுத்துச் செல்லுங்கள். நல்ல விலை பெறும்.

கப்பல் வாழைக்குலையில் இடைப்பழும் பழுத்தால் சந்தையில் போகக் கூடிய விலையின் மூன்றிலொரு பங்கு தான் தருவார்கள். ஏனெனில் கப்பல் குலை இடைப்பழம் பழுத்தால் மூன்று தினங்களில் முழுதாகப் பழுத்து விடும். அதனால் வியாபாரி நட்டப்பட்டு விடுவான்.

சந்தைக்கு வாழைக்குலைகளை எடுத்துச் செல்லும் போது காய்ந்த வாழைச்சருகுகளால் சுற்றியபடி கட்டி எடுத்துச்செல்லுங்கள். இதன் மூலமாக வாழைக்குலை சேதமடைவதைத் தவிர்க்கலாம்.

ஒரே தடவையில் இரண்டு இயலுமாயின் எம்.டி. 90 போன்ற மோட்டார் சைக்கிள்களில் சில குலைகளை எடுத்துச் செல்லலாம். அதன் மூலமாகப் போக்குவரத்து நேரத்தை மிச்சம் பிடிக்கலாம்,இலாபத்தை அதிகமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

கப்பல், கதலி அல்லது இதரை வாழைக் குலைகளை ஒரே நேரத்தில் எடுத்துச் செல்வதாயின் அவை இரண்டையும் ஒன்றாக வாங்கக் கூடிய ஒரு வியாபாரியிடம் அவற்றை விற்பனை செய்து கொள்ளுங்கள். தனித் தனியே வேறு வியாபாரிகளுக்கு விற்பதாயின் மிகுந்த அலைச்சல் படுவீர்கள்.

அதனால் ஒரே இனத் தன்மையான வாழைக்குலைகளை ஒரே நாளில் எடுத்துச் செல்லப் பாருங்கள். அதாவது கப்பலாயின் கப்பல் அல்லது இதரை ஆயின் இதரை என எடுத்துச் சென்று விற்கப் பாருங்கள்.

சந்தையில் வாழைக்குலைகள் நிறைய வந்து வாங்குவோர் குறைவாக இருந்தால் அன்று விலை மலிவாக இருக்கும். அது போல விற்போர் குறைவாக இருந்து வாங்குவோர் அதிகமாக இருந்தால் விலை அதிகமாக இருக்கும்.

ஒரு நாள் கிலோ 200 விற்ற கப்பல் வாழைக்குலை மறுநாள் 350 ரூபா விற்கும். அதற்கு அடுத்த நாள் 400 ரூபா 450 ரூபா வரையில் விற்கும்.அதனால் சந்தையின் விலைகள் நிச்சயமில்லை.

கோயில்திருவிழாக்கள், ஆடிஅமாவாசை, கந்தசஸ்டி ,நவராத்திரி போன்ற விரத காலங்களில் கதலிக் குலை அதிகம் விலை விற்கும்.

மங்கல நிகழ்வுகள் அதிகமாக இருந்தால் சாப்பாட்டுத் தேவைக்காக இதரைக் குலைகள் அதிக விலை பெறும். அம்மன் கோயில் திருவிழாக்களில் தேர்த்திருவிழாவுக்குக் கப்பல் வாழைப்பழங்கள் படைக்கும் வழக்கம் பரவலாக உள்ளது.

அதனால் அத்தகைய நாள்களில் இரண்டு நாள்கள் முன்னதாக அதாவது புதன்கிழமை நிகழ்வாயின் திங்கட் கிழமையன்று வாழைக்குலையுடன் செல்ல வேண்டும். நல்ல விலை கிடைக்கும்.

கறிவாழை இனங்களில் சாம்பல், மொந்தன் வாழைக்குலைகள் மரக்கறி விலை உச்சமான நாள்களில் அல்லது விசேட விரத காலங்களில் உச்சவிலை



விற்கும். அத்தகைய தருணங்களில் விரதத்துக்கு முதல் நாள் சந்தைக்கு வாழைக்குலைகளை எடுத்துச் செல்லுதல் நன்று.

வெளிநாடுகளிலுள்ள எம்மவர்கள் தமது உணவகங்களில் வாழைக்காய்ப் பொரியலை மதிய உணவுடன் கொடுப்பதற்கும், சிற்றுண்டியாக உண்பதற்குமாகத் தயாரிக்கின்றனர். அதனால் வாழைக் குலைச் சீப்புகள் சரக்கு விமானங்கள் ஊடாக வெளிநாடுகளுக்குச் செல்கின்றது.

மொந்தன் வாழைக்குலையை விடச் சாம்பல் வாழைக்குலைகள் தான் மதிப்புக் கூடியவை. அதனால் சாம்பல் கறிவாழைக்குலைகளைக் கூடுதலாக செய்கை பண்ணுங்கள். இங்குள்ள உள்ளூர் உணவகங்கள் விலை மலிவுக்காக மொந்தன் வாழைக்காய்களை வாங்குவார்கள். இந்த இனத்திலும் யாழ்ப்பாண மொந்தன் வன்னி மொந்தன் என இருவகையுண்டு.யாழ்ப்பாண மொந்தன் தான் அதிக விலை விற்கிறது. எனவே அதனைக் கூடுதலாகச் செய்வது இலாபகரமானது.

செவ்வாழை ,ஆனைவாழை போன்ற வாழைக்குலைகளும் நீர்வேலிச் சந்தையில் நல்ல விலை பெறுகின்றன. ஆகவே அவற்றையும் நம்பி விற்பதற்கு எடுத்துச் செல்லலாம்.

வாசகர்களே!

இதுவரை பொறுமையாக வாசித்தமைக்கு நன்றி. போர் முடிந்து ஒன்றரைத் தசாப்தமாகி விட்டது. தரைவழிப்பாதை ஊடாக வாழைக்குலைகள் நாடெங்கும், உலகமெங்கும் எடுத்துச் செல்லப்படுகின்றன.

வாழை உங்களை வாழ வைக்கும். அதனால் ஒரு துண்டு நிலத்தைக் கூடக் கைவிடாமல் வாழை வையுங்கள். குறிப்பாகக் கிணற்றடி, சமையலறை, குளியலறைக் கழிவுத் தண்ணீர் வரும் இடங்களில் வாழை நடுங்கள். அதிக குட்டிகள் இல்லாமல் ஒரு அடிக்கு ஒரு குட்டியென விட்டுப் பராமரியுங்கள்.

வாழை நிச்சயமாக உங்களை வாழ வைக்கும். தமிழர் பொருண்மியமும் வானுயர ஓங்கும்.

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0777304010 / 0702675575

## சீனாவிலிருந்து இஞ்சி?

இஞ்சியை இறக்குமதி செய்யப்போவதாக அரசாங்கம் அறிவித்ததையடுத்து, அதற்கு எதிராக தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது. கடந்த காலங்களில் இஞ்சி இறக்குமதியை அரசாங்கம் நிறுத்தியிருந்தது. அதேவேளையில் ஒரு கிலோ இஞ்சியின் விலை 4,500 ரூபாவிலிருந்து 5 ஆயிரம் ரூபா வரை உயர்ந்திருந்தது. இந்த நிலையில் விவசாயிகள் பலர் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் இஞ்சி உற்பத்தியில் இறங்கியிருந்தார்கள். அவர்களுடைய அறுவடை சந்தைக்கு வரும் நிலையில்தான் சீனாவிலிருந்து அரசாங்கம் இஞ்சியை இறக்குமதி செய்கின்றது.

பொருளாதார நெருக்கடி ஒன்றுக்குள் நாடு சிக்கித் தவித்த போது, அதிலிருந்து மீள்வதற்காக அரசாங்கம் நடைமுறைப்படுத்திய திட்டங்களில் முதன்மையானது இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துதல். அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு பொது மக்களுக்கு அது சில நெருக்கடிகளைக் கொடுத்திருந்தாலும் கூட, பொருளாதார நிபுணர்களால் அந்த நடவடிக்கை வரவேற்கப்பட்டது. நீண்டகால அடிப்படையில் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும், அந்நியச் செலாவணியைச் சேமிப்பதற்கும் இது முக்கியமான ஒரு செயற்பாடு என்று பாராட்டப்பட்டது.

1970 களில் சிறிமாவோ பண்டாரநாயக்க அரசாங்கம் முன்னெடுத்த இது போன்ற இறக்குமதிகளைக் கட்டுப்படுத்திய செயற்பாடு, வெங்காயம், மிளகாய் போன்ற விவசாயச் செய்கைகளில் ஈடுபட்டிருந்தவர்களைச் செல்வந்தர்களாக்கியது. நாடும் குறுகிய காலத்துக்குள் தன்னிறைவை நோக்கி வேகமாகச் செல்வதற்கு அது காரணமாகியது. ஆனால், 1977 இல் பதவிக்கு வந்த ஜெயவர்த்தன அரசின் திறந்த பொருளாதாரக் கொள்கை மீண்டும் இறக்குமதிகளை நோக்கி மக்களை ஓடச் செய்தது. அந்நியச் செலாவணி கரைந்தமைக்கு அதுவும் ஒரு காரணம்.

கடந்த காலத்திலிருந்து எந்தப்பாடங்களையும்படித்துக்கொள்ளாத அரசாங்கம், இப்போது விவசாய களநிலைமைகளையிட்டு எந்தவிதமான ஆய்வுகளும் இல்லாமல் இஞ்சியை இறக்குமதி செய்கின்றது. இஞ்சி இறக்குமதி தடை செய்யப்பட்டிருந்த சந்தர்ப்பங்களில் உருளைக் கிழங்கு, பெரிய வெங்காயம் உள்ளிட்ட பல்வேறு பொருட்களை இறக்குமதி செய்யும் கொள்கலன்களில் மிகவும் சூட்சுமமாக மறைத்து வெளிநாட்டு இஞ்சி இலட்சக் கணக்கான கிலோ வர்த்தக நிலையங்களுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்

இஞ்சிக்கு எவ்வித கட்டுப்பாடும் கிடையாதெனவும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் இஞ்சி உற்பத்தி செய்யப்பட்டு அறுவடையாகி வர்த்தக நிலையங்களுக்கு எடுத்து வரப்படும் நிலையில் ஒளித்து மறைத்து வைக்கப்பட்டுள்ள வெளிநாட்டு இஞ்சியை சந்தைக்கு கொண்டுவருவதற்காக சீனாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கு அனுமதி பெற்றுக்கொடுக்கப்பட்டிருப்பதாகவும் சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது. அரசாங்கம் மாற்றமடையும் நிலையில் இடம்பெறும் இவ்வாறான முறையற்ற செயற்பாடுகளுக்கு பொறுப்புக் கூறுவது யார்?

# கொய்யா இது மெய்யா?

**கொய்யாவின் தோலில் அதிக சத்துக்கள் உள்ளன. இதனால் தோலை நீக்கி சாப்பிடக்கூடாது. நமது தோலின் வறட்சியை நீக்கி முகத்திற்கு பொலிவையும் அழகையும் தருகிறது. முதுமை தோற்றத்தை குறைத்து இளமையானவராக மாற்றுகிறது. இனி கொய்யாக்கனியை மெய்யாக தேடிப்புசியுங்கள்.**

க.அமுதன்–கீரிமலை

மெக்ஸிகோ நாட்டில் உள்ள கல்வில்லோ நகரம் தான் கொய்யாவின் பிறப்பிடமாக கருதப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் கல்வில்லோ நகரில் நடக்கும் கொய்யா கண்காட்சி உலகப்புகழ் பெற்றதாகும்.

கொய்யா இலங்கை, இந்தியா,சீனா, தாய்லாந்து,மியான்மர் நாடுகளில் அதிகம் வளர்க்கப்படுகிறது.

கொய்யாச்செடியானது வீட்டுத்தோட்டங்களிலும், வயலின் வரப்புகளிலும் வளர்க்கப்படும் மர வகையாகும்.

**பயிரிடும் முறை:**

ஆனி,ஆடி ,ஆவணி,மாதங்கள் கொய்யா நடவு செய்வதற்கு ஏற்ற மாதங்கள் ஆகும்.

செம்மண்,கரிசல்மன்,களிமண் நிலங்களில் நன்கு வளரும் தன்மை கொண்டது.

பயிரிட தேர்வு செய்யப்பட்ட நிலத்தை நன்கு உழவு செய்ய வேண்டும். பின்பு இருபது அடி இடைவெளியில் ஒன்றரை அடி நீள,அகல,ஆழம் உள்ள குழிகளை எடுக்க வேண்டும். பின்பு ஒவ்வொரு குழிக்கும் 10 கிலோ தொழுஉரம், ஒரு கிலோ வேப்பம் புண்ணாக்கு இட்டு மேல்மண் கலந்த கலவை கொண்டு குழியை மூட வேண்டும்.

பாலிதீன் பையில் அல்லது தொட்டியில் உள்ள செடிக்கு எவ்வித சேதமும் ஆகாமல் எடுத்து குழியின் மத்தியில் நடவேண்டும். மிக உயரமான நாற்றுகளாக இருந்தால், அதன் அருகே இரண்டு காய்ந்த குச்சிகளை நட்டு, கொய்யா செடியையும் குச்சியையும் இணைத்து கட்ட வேண்டும்.

நாற்று நடவு செய்தவுடன் குழி முழுவதும் நனைந்து, மண் இறங்கி இறுக்கம் அடையும் அளவுக்கு தண்ணீர் விட வேண்டும். பின்பு மூன்றாம் நாள் உயிர்த் தண்ணீர் விட வேண்டும். அதன்பின் மண்ணின் தன்மையை பொறுத்து ஏழு முதல் பத்து நாட்களுக்கு ஒருமுறை நீர் பாய்ச்ச வேண்டும்.

**உரங்கள் இடும் முறை :**

மார்ச்,அக்டோபர் மாதங்களில் ஒவ்வொரு மரத்திற்கும் தொழுஉரம் மற்றும் ஆட்டு உரம் கலந்து 50 கிலோ, மண்புழு உரம் 2 கிலோ , வேப்பம் புண்ணாக்கு 2 கிலோ சேர்த்து போட்டு நீர் பாய்ச்ச வேண்டும்.

இரசாயன உரம் போட விரும்புபவர்கள் அரை கிலோ தழை,மணி, சாம்பல் சாது உள்ள ரசாயன உரங்களை கலந்து மரத்தின் வெளி வட்டத்தில் குழி எடுத்து ஒரு கூடை தொழு எருவுடன் கலந்து போட்டு மண் மூடி தண்ணீர் பாய்ச்ச வேண்டும். இதே போல் வருடத்திற்கு இரண்டு முறை செய்ய வேண்டும்.

களை நிர்வாகம்:

செடியை சுற்றி களைகள் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். களைகளின் வளர்ச்சிக்கு ஏற்றவாறு அதனை நீக்க வேண்டும்.

செடியின் அடிபாகத்தில் குறுக்கும் நெடுக்குமாக தோன்றும் கிளைகளை நீக்க வேண்டும். மேல்நோக்கி நீண்டு வளரும் கிளைகளின் நுனியை கிள்ளி எடுத்து பக்கவாட்டு கிளை வளர்ச்சியை அதிகப்படுத்த வேண்டும். இல்லையெனில் கிளைகள் இல்லாமல் செங்குத்தாக வளரும்.

செடிகள் நட்ட 2 ஆம் வருடத்திலிருந்தே காய்க்க ஆரம்பித்து விடும். பூத்ததிலிருந்து 5 மாதங்கள் கழித்து கனிகளை அறுவடை செய்யலாம்.

ஒரு ஹெக்டருக்கு 25 டன் வரை மகசூல் கிடைக்கும்.

ஊடுபயிராக குறைந்த வயதுடைய அவரை, கத்தரி ஆகியவற்றை கொய்யா காப்பு வரும் வரை வளர்க்கலாம்.

பயன்கள்:

விட்டமின் பி மற்றும் விட்டமின் சி ஆகிய உயிர்சத்துக்கள் கொய்யாப் பழத்தில் அடங்கியுள்ளன. கால்சியம், பாஸ்பரஸ், இரும்புசத்து போன்ற தாது உப்புகளும் இதில் உள்ளது.

சொறி சிரங்கு,ரத்த சோகை இருப்பவர்கள் கொய்யாப்பழத்தினை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

ரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்தும் சக்தியும் வயிற்றுப்போக்கு, மூட்டுவலி, அரிப்பு, மூலநோய், சிறுநீரக பல நோய்களை கட்டுப்படுத்தும் ஆற்றல் இதற்கு உண்டு.

கொய்யாவின் தோலில் அதிக சத்துக்கள் உள்ளன. இதனால் தோலை நீக்கி சாப்பிடக்கூடாது. நமது தோலின் வறட்சியை நீக்கி முகத்திற்கு பொலிவையும் அழகையும் தருகிறது. முதுமை தோற்றத்தை குறைத்து இளமையானவராக மாற்றுகிறது. இனி கொய்யாக் கனியை மெய்யாக தேடிப்புசியுங்கள்.

தமிழர் பொருணமியம் வாரமலர் TAMILS ECONOMY






**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,94,800 ரூபா.**

**24 கரட் தங்கம் 2,12,450 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**






**கேள்வி -** தமிழகத்துக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதை எவ்வாறு பார்க்கின்றீர்கள். நல்லூர் திருவிழாவை முன்னிட்டு விஷேட சலுகைக் கட்டணம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாமே?

**சசிகுமார் கண்ணன்**
**யாழப்பாணம்.**

**பதில் -** நீண்ட கால எதிர்பார்ப்பின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டம் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றுதான். போதிய பயணிகள் இல்லாமையால் தற்போதைக்கு வாரத்துக்கு மூன்று நாட்களுக்கு மட்டுமே இந்தச் சேவை நடைபெறும் என்றும் தெரிவிக்கபபட்டது. கப்பல் சேவை இரு தரப்பினருக்கும் பரஸ்பரம் நன்மை பயப்பதாக இருக்க வேண்டும். ஒரு தரப்புக்கு மட்டும் சேவை செய்வதாக இருக்கக்கூடாது.

பயணிகள் பரிமாற்றம் என்பதைவிட, பொருளாதார ரீதியாக இதன் முக்கியத்துவம் என்ன என்பதையும், இதனை நாங்கள் எவ்விதம் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பதையிட்டும் ஆராய்வது அவசியம்.

தமிழகத்திலிருந்து இங்கு கொண்டு வருவதற்கு நிறையப் பொருட்கள் இருக்கின்றன. ஆனால், இங்கிருந்து அங்கு கொண்டு செல்வதற்கு என்ன இருக்கின்றது என்பது ஆராயப்பட வேண்டும். அவை பட்டியலிடப்பட வேண்டும். அவற்றை ஒருங்கிணைத்து ஏற்றுமதி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். அதன்மூலமாகத்தான் கப்பல் சேவை நடத்தப்படுவதன் பலன்களை எம்மவர்களும் முழுமையாக அனுபவிக்க முடியும்.

அதேவேளையில் நல்லூர் பெருந்திரு விழாவுக்காக அங்கிருந்து வரக்கூடியவர்களை ஊக்குவிக்கும் வகையிலும், கன்னியாகுமரி திருவிழாவுக்காக இங்கிருந்து செல்பவர்களுக்காகவும் சலுகைக் கட்டணம் ஒன்று தற்போது அறிமுகம் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இதுவும் ஒரு நல்ல முயற்சி. கப்பல் சேவையை மக்கள் அத்தியில் அறிமுகம் செய்துவைப்பதற்கு இது போன்ற ஊக்குவிப்புக்கள் அவசியம்தான்.

அதேவேளையில் வடக்கு - கிழக்குப் பகுதிகளின் வர்த்தக வளர்ச்சிக்கு இந்தக் கப்பல் சேவையை எவ்வாறு திட்டமிட்டுப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதில் நாம் அவதானம் செலுத்துவது அவசியம்.

**உங்கள் கேள்விகளை**
**தமிழர் பொருணமியம்,**
**கிறீன் மீடியா ஹவுஸ்,**
**68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.**
**என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.**
**வாட்ஸ் அப் முகவரி +94 777 304010**




| | |
|---|---|
| கத்தரிக்காய் | 170/= |
| உருளைக்கிழங்கு | 230/= |
| பச்சை மிளகாய் | 200/= |
| தக்காளி | 370/= |
| மரவள்ளிக்கிழங்கு | 200/= |
| கோவா | 320/= |
| கரட் | 300/= |
| வாழைக்காய் | 300/= |
| சின்ன வெங்காயம் | 300/= |
| பாகற்காய் | 300/= |
| வெண்டிக்காய் | 150/= |
| பயற்றங்காய் | 200/= |
| பீற்றூட் | 300/= |
| முருங்கைக்காய் | 180/= |
| தேங்காய் | 120/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 197/= |
| கனடா டொலர் - | 216/= |
| சீன யுவான் - | 41/= |
| யுரோ - | 323/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர்டொலர் - | 224/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 385/= |
| சுவிஸ் பிராங் - | 344/= |
| அமெரிக்க டொலர் - | 295/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 207/= |
| கனடா டொலர் - | 225/= |
| சீன யுவான் - | 43/= |
| யுரோ - | 341/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர் டொலர் | 235/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 401/= |
| சுவிஸ் பிராங் - | 361/= |
| அமெரிக்க டொலர் - | 305/= |

# எங்கட ஆச்சி



காரைக்கவி கந்தையா பத்மானந்தன்

எங்கட அப்பு கடவுளை விடச் சாவு பெரிசெண்டுவார். ஏனெண்டால் கடவுள் சாதி சமயப் பிரிவுகளால பிரிபட்டுக்கிடப்பார். ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு பெயரிலை இருப்பார். ஆனா சாவு அப்பிடி இல்லை. அது எல்லாருக்கும் பொதுவானது ஏற்றத்தாழ்வு பாக்கிறேல்லை எண்டுவார்.

முந்தியும் எங்கட ஊர்கள் அப்பிடித்தான் இருந்தது .முந்தி எங்கட கண்ணுக்கு முன்னால எங்கட சனஞ் செத்தது எண்டாலும் இப்ப என்னவோ சில நேரம் இந்தச் செத்த வீட்டுச் செய் திகளைக் கேக் கேக்கை குறிப் பா இளம் பெடி பெட்டையளின்ரை செத்த வீட்டுச் செய்திகளைக் கேக்கேக்கை மனசுக்கை என்னவோ செய்யுது.

ஒரேயோரு வித்தியாசம் முந்தி கண்ணுக்குத் தெரிஞ்ச மனுசன் ஒவ்வொரு காரணங்களைச் சொல்லி அது சரியோ பிழையோ எண்டதை யோசிக்காமல் தன்ரை சக மனிசனைச் சாக்காட்டினான். இப்ப என்னண்டால் கண்ணுக்குத் தெரியாத கிருமியோட போதை வஸ்து இன்னும் கன காரணங்கள் ஒண்டுமொண்டாச் சேந்து மனிசனைச் சாக்காட்டுது. மனிசனுக்கே சரி பிழை விளங்காம இருக்கேக்கை

முந்திப் பாத்தம் எண்டால் சுடுகாடு எண்டது ஊரில ஒரு ஒதுக்குப்புறமா இருக்கும் .

உந்தக் கோவிட் கிருமி வந்த பிறகு ஊரே சுடுகாடு ஆனமாதிரி ஒரு நிலமை வந்ததை நாங்கள் பாத்தனாங்கள் .

வயது வேறுபாடு ,பால்வேறுபாடு, இன மத,மொழி,சாதி,பிரதேச நிற வேறுபாடு இல்லாமல், படிச்சவன் பாமரன், பணக்காறன், இல்லாதவன் செல்லாதவன், பதவியிலை உள்ளவன், இல்லாதவன் எண்டு எந்த வேறுபாடும் இல்லாமல் சனஞ் செத்துக்கொண்டிருந்தது .

ஊரே சுடுகாடா மாறினது எங்களுக்கு ஒண்டும் புதுசு இல்லை கோவிட்டுக்கு கிருமிக்கு என்னண்டு விளங்கும்.

ஒரே ஒரு ஒற்றுமை முந்தியும் சரி இப்பவுஞ்சரி கன சனம் ஏன் சாகிறம் எண்டு தெரியாமலே சாகுதுகள். முந்தியும் தெருவழியை தங்கட அலுவலுக்குப் போன சனங்கள் செத்தது. இப்பவும் அப்பிடித் தான் சில நேரம் போகேக்கை வரேக்கை விழுந்து சாகுதுகள். கிருமி தங்களிலை ஏறிக் குடியிருக்கு எண்டு தெரியாமலே சிலது சாகுதுகள். நேற்றுக் குடும்பத்தோட உறவினர்களோட நண்பர்களோட கதைச்சுக் கொண்டிருந்தவன் இண்டைக்கு இல்லை.

எங்கட அப்பு கடவுளை விடச் சாவு பெரிசெண்டுவார். ஏனெண்டால் கடவுள் சாதி சமயப் பிரிவுகளால பிரிபட்டுக்கிடப்பார். ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு பெயரிலை இருப்பார். ஆனா சாவு அப்பிடி இல்லை. அது எல்லாருக்கும் பொதுவானது ஏற்றத்தாழ்வு பாக்கிறேல்லை எண்டுவார்.



எவனும் கடைசியாக சாவின்ரை கையில அம்பிட்டு சுடுகாட்டுக்குப் போவான். அப்பிடிப் போகேக்கை கட்டி இருக்கிற அறுணாக்கொடி கூடப் போகாது. அதையும் அறுத்துப் போடுவாங்கள் எண்டுவார்.

இனசனம், பெண்டில், பிள்ளை, புருஷன், சொத்துப்பத்து, நகைநட்டு, காசு பணம், பட்டம் பதவி எல்லாத்தையும் விட்டுப் போட்டுத்தான் போகவேணும் எண்டுவார். ஆற்றையும் செத்த வீட்டுக்குப் போறவைக்கு இப்பிடி இதுகள் எல்லாம் நிரந்தரம் இல்லையெண்ட உண்மை சுடலையில விளங்கும். ஆனா செத்த வீட்டால வந்து தோஞ்சு குளிச்ச பிறகு உதை மறந்துபோய் பிறகு ஒவ்வொண்டுக்குப் பின்னாலையும் ஓடுவினம்.

உதாலதான் உதை எங்கட ஆக்கள் சுடலை ஞானம் எண்டிறவை எண்டுவார்.

இண்டைக்கு நடக்கிற சில சம்பவங்களைப் பாத்தம் எண்டால் என்ரை பிள்ளை நான் செத்தா எனக்கு கொள்ளி வைக்கும் எண்டு நம்பின கனபேர் பிள்ளையள் இருந்தும் கொள்ளி வைக்கேலாம இனசனம் வந்து கூடி ஒப்பாரிவைச்சு அழேலாம இவை ஒண்டும் இல்லாம அனாதைப் பிணங்களாக ஆரோ சுடலைக்கு கொண்டே ஈமச்சடங்கு செய்யிற நிலமை வந்திருக்கு. முந்தியும் இப்பிடி எரிக்கப் புதைக்க வழியில்லாமல் அனாதைப் பிணங்கள் அங்கை இஞ்சை கிடந்தாலும் இப்பவும் அது நடக்கிறது தாங்கேலாமல் இருக்குது.

உயிரோட இருக்கிறவையும் கூட நாளைக்கு நானும் அனாதைப் பிணமாப் போய்ச் சேர்ந்திடுவோமா எண்டே ஒவ்வொருநாளும் செத்துப் பிழைச்சுக் கொண்டு இருக்கினம் எண்டுதான் சொல்லவேணும் எண்டு எங்கட ஆச்சி நெடுகவும் சொல்லிறவ .

# உங்கள் படைப்பாக்கத் திறனுக்கு ஒரு வாய்ப்பு



நவீன காலத்தில் உற்பத்தித் துறையில் ஈடுபடும் போது அதனை மேம்படுத்தவும் இலகுபடுத்தவும் புதிய உபகரணங்கள் அல்லது இயந்திரங்கள் தேவைப்படுகின்றன.

அவ்வாறான கருவிகள் பலவற்றை கடந்த காலங்களில் எம்மவர்கள் கண்டுபிடித்திருக்கின்றார்கள்.

உங்களிடமும் அவ்வாறான ஒரு யோசனை இருந்து, அதனைச் செயற்படுத்த உதவி தேவையாக இருந்தால் அதனை வழங்க தமிழர் பொருண்மியம் தயாராக இருக்கின்றது.

இரண்டு பிரிவுகளாக இதற்கான உதவிகளை வழங்குவதற்கு பொருண்மியம் குழுவினர் திட்டமிட்டுள்ளார்கள்.

## உள்நாட்டு உற்பத்தி மேம்பாட்டிற்கான புதிய இலகு கருவிகளை கண்டுபிடித்தல்

1. வேலையை இலகுபடுத்துவதும் நேரத்தை மிச்சப்படுத்துவதுமாக அமைதல்.
2. சமூக பாவனைக்கு உகந்ததாகவும் பாதுகாப்பானதாகவும் அமைதல்.
3. கூடிதலாக கிடைக்கப்பெறும் வளங்களைக்கொண்டு உருவாக்க கூடியதாக அமைதல்.
4. ஏற்கனவே கண்டுபிடிக்கப்படாத, சொந்த தயாரிப்பாக இருக்க வேண்டும்.
5. நியாயமான விலையில் எல்லோருக்கும் கிடைக்ககூடியதாகவும்,அனைவரும் பயன்படுத்தகூடியதாகவும் அமைதல்.

இதற்கான உங்கள் யோசனைகளை நீங்கள் முன்வைக்கலாம். உங்களுடைய முன்மொழிவுடன் அதற்குத் தேவையான செலவுத் தொகையும் குறிப்பிடப்பட வேண்டும்.

தெரிவு செய்யப்படும் திட்டங்களுக்கு தேவையான நிதி உதவியை வழங்க தமிழ் பொருண்மியம் தயாராகவுள்ளது.

## மக்களை வலுப்படுத்தும் சனசமூக நிலையங்களினை அடையாளப்படுத்தல்

1. பதிவுசெய்யப்பட்ட சனசமூக நிலையங்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம்.
2. இவர்கள் தமது சமூகத்து மக்களையும் உள்ளூர் வளங்களையும் இணைத்து திட்டங்களை மேற்கொள்வது பொருத்தப்பாடானது.
3. அவர்கள் தமது சமூகத்தின் வளர்ச்சிக்காக ஆற்றிவரும் பணிகளையும் , வரும் காலத்தில் உள்நாட்டு அல்லது தமது சமூகத்தில் செயற்படுத்துவதற்கு ஆயத்தமாக இருக்கும் திட்டங்களையும் சமர்ப்பிக்கலாம்.
4. திட்டங்கள் அனைத்தும் அந்த சமூகத்தின் நன்மை கருதுபனவாயும், அவர்களனைவரதும் வாழ்வாதாரத்தை பலப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும்.
5. கண்காணிப்பு குழுவினலால் ஆராய்ந்து முடிவுறுத்தப்படும் திட்டங்கள் போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கான நிதி உதவிகளும் வழங்கப்படும்.

மேலதிக விபரங்கள் அடுத்த வாரம்

உங்களுடைய முன்மொழிவுகளை வாட்ஸ் அப் மூலமாகவோ மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பிவைக்கலாம்.

**வாட்ஸ் அப் இலக்கங்கள் +94 777 30 4010 / +94 702 67 5575**
**மின்னஞ்சல் - tamilseconomy@gmail.com**

# ஈரற்பெரிய குளத்தின் கதை

**ஈரற்பெரிய குளத்திற்கும் மேற்குளங்களிலிருந்து நீர் வருகிறது. மாமடுவ மகா மயிலங்குளம், மருதன்குளம், சமளங்குளம், கோவில்குளம், கோவில் புதுக்குளம் என சிறுதும் பெரிதுமான குளங்களின் நீர் வாய்க்கால் வழியாக ஈறற்பெரிய குளத்தை அடைகிறது. இந்தக் குளங்கள் மூன்று தடவையாவது வான் பாய்ந்தால்தான் ஈறற்பெரிய குளம் ஒரு தடவை வான்பாயும். அவ்வளவு நீரைக் கொள்ளக்கூடிய இராட்சதக்குளம் இது.**

## பார்வை 3



தமிழ்க்கவி



முன்னொரு காலத்தில் பிரித்தானியருக்கும் முன்பாக ஒல்லாந்தர் போத்துக்கேயர் என பல நாட்டவர்களால் எமது நாடு கைப்பற்றப்பட்டு ஆட்சி செய்யப்பட்டது. ஆதலால் எமது மக்களுக்கான எமது நாட்டின் வளங்களை உதாசீனம் செய்து விட்டு மக்கள் வெளிநாட்டவர்களின் வேலைகளுக்கு கூலிகளாக மாறினர். விவசாயம் கைத்தொழில் என்பவை நலிவற்றன. நீர்பாய்ந்து நெல் விளைந்த களனிகள் காடுமண்டியும் குளங்கள் உடைந்தும் கவனிக்கப்படாமல் போயின.

மக்கள் மிக செறிவாக வாழ்ந்த நிலை மாறி சோழர்காலம் முதல் இந்தக்காலம்வரை போரிலும் பெருமளவு மக்கள் வாழ்க்கையை இழந்தும் இடம்பெயர்ந்தும் போயினர். யுத்தங்கள் நடந்தாலும் அல்லாது போனாலும் வெளிநாட்டவர்கள் இங்கிருந்து எமது வளங்களை தமது நாடுகளுக்கு கொண்டு சென்று சேர்ப்பதிலேயே கவனம் செலுத்தினர்.

பிரித்தானியர்கள் ஆட்சியில்தான் முழுமையான இலங்கை கைப்பற்றப்பட்டு முடிந்தது. அவர்களுடைய நிர்வாகம் கண்டி முதல் (இலங்கை யில் அனைத்து வழிகளும் கண்டியிலிருந்துதான் கணிக்கப்பட்டுள்ளமையால் நானும் அதை வைத்து பேசுகிறேன்) நாட்டின் நாலாபுறமும் நடைபெற்று பெருமளவு வளங்கள் கண்டி, குருநாகல், புத்தளம், வன்னி என பெறப்பட்டது. ஆனால் மக்களே இந்த வளங்களை அவர்கள் எடுத்துக் கொண்டு அவற்றை தமது நாட்டிற்கு அனுப்ப கடல்வழியே இருந்தது.

அப்போது விமானம் கண்டுபிடிக் கப்படவில்லை என்பதுமட்டுமல்ல, கார், லொறி, ட்ரைக்ரர் போன்றவையும் இல்லை. தரைவழியில் மாட்டுவண்டிகள் யானைகள், குதிரைகள், கழுதைகள் என சுமையுந்துகள் இருந்தன. அப்போதுதான் புதிய கண்டு பிடிப்பான நீராவி இயந்திரம் வெள்ளோட்டம் விடப்பட்டு அதிலிருந்து ‘கோச்’ என்ற வாகனம் கண்டுபிடிக்கப்பட்டது. இருந்தும் என்ன அது இலங்கைக்கு வரவில்லை என்பதுடன், அது ஓடுவதற்கும் விசேடமான இரும்புப் பாதை தேவைப்பட்டது.

எனவே வெள்ளையர்கள் அதாவது பிரித்தானியர்கள் கொழும்பிலிருந்து ஒரு தண்டவாளப் பாதையை அமைத்து இந்த கோச் வண்டியை வைத்து சுமைகளையும் பயணத்தையும் செய்ய முடிவெடுத்தனர். எனவே வீதி அமைக்கும் பணிக்காக ஊரவர்கள் கூலிகளாக சேர்த்துக் கொள் ளப்பட்டனர். அவர்களுக்கு ஊதியத்துடன் கோதுமை மா, பருப்பு, சீனி போன்றவையும் வழங்கப்பட்டன. இனாமாகத்தான் வழங்கப்பட்டது. அது ராஜகாரியம் செய்வதாக கணிப்புப் பெற்றது.

அதுமட்டுமல்ல அந்த கூலிகளுக்கு வாரம் ஒருநாள் அரைப் போத்தல் சாராயமும் வழங்கப்பட்டது. இந்த இனாம்களால் கவரப்பட்டு மக்கள் பெருமளவில் கூலிகளாக மாற ஊரில் வயது போன முதியோரும் பெண்களுமாக சிறு அளவில் விவசாயத்தை செய்தனர். ஒரு விவசாயிக்கு ஒருமரக்கால் தரை கொடுக்கப்பட்டது. அதாவது ஒரு மரக்கால் என்ற அளவு ஒரு புசல் நெல் விதைக்கக்கூடிய நிலம் என்றாகும். இந்த மரக்கொட்டுகள் இத்துப்போனால் அப்படியே கைவிடப்பட்டு கட்டுகளை வெட்டி நீரைப்பாய்ச்சினர். இப்போது மெதுவாக குளங்கள் தூர்வடைந்தும் உடைப்பெடுத்தும் போனபின், அதை மீளமைக்காமல் கைவிட்டனர். காரணம் அதை செய்யும் ஆற்றலுள்ளவர்கள் படிக்காசுக்கு வெள் ளையரின் கூலிகளாக வேலை செய்தனர். மக்களும் அக்கறையற்று இந்த குளங்களைப்

பேணவில்லை. மழைக்காலங்களில் மானாவாரியாக (வானத்தைமழையை நம்பி) விதைப்ப துடன் நின்றனர்.

இந்த நீராவியந்திரப் பாதைகளை அமைக்கும் போது அதன் ஓடுபாதையின் அமைவிடம் முக்கியமாக கவனிக்கப்பட்டது. பத்து தொடரிப் பெட்டிகளை இழுத்துச் செல்லும் ஒரு எந்திரத்திற்கு அவ்வளவு பலமான நீராவி உற்பத்தியாக வேண்டும், நீர் கொதித்துக் கொண்டே இருந்தால்தான் எந்திரம் ஓடும். அதை கொதிநிலையில் வைத்திருக்க இருவர் அதற்கு கரியை அள்ளி அள்ளி போட்டுக் கொண்டே இருப்பார்கள். தழல் கனன்று கொண்டே இருக்கும். அந்த நீர் கொதித்துக் கொண்டே இருந்தால் வற்றும். எனவே, நீரையும் குறைய விடாமல் நிரப்பியாக வேண்டும் எனவே அந்தப்பாதை நீருள்ள குளங்க ளையும் காடுகளையும் அண்டியதாக அமைக்கப்பட்டது.

இந்த நெடும் பாதையில் வன்னி ஆரம்பிக்கும் போது வரும் குளம் ஈரற்பெரியகுளம். இங்கே குளத்தின் கரையோரமாக வரும் பாதை மீண்டும் புளியங்குளத்தில் நீரையும் கரியையும் வாங்கிக் கொள்ளும். அப்படியே அடுத்த குளம் மாங்குளத்திற்கும் முன்பே வருகிறது. மாங்குளம்பெரிய அளவில்நீரை பெறக்கூடிய குளம் அல்ல. கனகராயன் குளம் கடந்து வரும் மன்னாகண்டலை இலக்குவைத்த பாதை கற்பாதையிலிருந்து புளியங்குளம் கடந்ததுமே காட்டினுள் செல்கிறது. கற்பாதையிலிருந்து சுமார் நான்கு ஐந்து கிலோமீட்டர்கள் உள்ளே சென்று மன் னாகண்டலில் நீரைப்பெற்று மீண்டும் மாங்குளத்தில்வெளியே வந்து மாங்குளத்தில் கற்பாதையை அண்டி ஓடுகிறது.

மாங்குளம் புளியங்குளம் இரண்டிலும் புகையிரதப்பாதைக்கான சிலிப்பர் கட்டைகள் வெட்டி அடுக்கப்பட்டிருக்கும். இவற்றை குத்தகை வேலையாகப் பெற்று சிலர் செய்வார்கள் இதற்காக பெருமளவு காடுகள் அழிக்கப்பட்டன.

இந்த போக்கு வரத்து சாதனத்தை இலக்கு வைத்து எவ்வளவோ விவசாய நிலங்கள் மலடாக்கப்பட்டன. விவசாயிகள் தமது தொழிலை கைவிடவேண்டி அமைந்தது. இன்றைய பாலியாற்றருகே வரப்போவதாக கூறப்படும் நீர்த்தேக்கமும் இவ்வாறே. பலரை அல்லது பலரது வாழ்வை அழித்துத்தான் ஒவ்வொரு புதிய திட்டங்களும் போடப்படுகின்றன. அவை பற்றி நான் ஒவ்வொன்றாக பார்ப்பேன். இப்போது வாருங்கள் ஈறற்பெரிய குளத்திற் குப் போவோம்.

ஈரற்பெரியகுளம் இலங்கையின் பெரிய குளங்களின் வரிசையில் உள்ளது. இயற்கையாகவே அமைந்த ஒரு மலைத் தொடரே அதன் அரணாக இருக்கிறது. குளக்கட்டின் மீது நடந்து செல்லும் போது அலாதியான இன்பம் பிறக்கும் மகாபலி புரத்தில் நிற்பதான உணர்வு வருவதை தடுக்க முடியாது. அங்கே சிற்பங்களாக மாறிய பாறைகளை காணலாம். இங்கே இயற்கையாகவே பிறந்த மேனியாக நிற்கும் அழகிய பாறைகள் குன்றுகள் ஒன்றையொன்று தழுவிநிற்கும் அழகு அங்குகிருந்து சுமார் ஐந்து மைல்களுக்கு மேலாக பரவிநிற்கும் சலனமற்ற நீர்ப்பரப்பு. கொள்ளை அழகானது இந்தக்குளம் அந்தக்கட்டின்வழியாக நடந்து தெற்கெல்லை நோக்கி சென்றால் வெளியே வெகு தூ ரம்வரை கண்ணில் தெரியும். சிறு குன்றில் முடியும். அங்கிருந்து பார்த்தால் கிராமத்தின் பெரும்பகுதியும் வயல் வெளிகளும் தெரியும் கிராமத்தை ஒட்டியதாக வரும் தொடருந்துப்பாதையில் அட்டையைப்போல செல்லும் ரயில் தெரியும்.

ஈறற்பெரிய குளத்திற்கும் மேற் குளங்களிலிருந்து நீர் வருகிறது. மாமடுவ மகா மயிலங்குளம், மருதன்குளம், சமளங்குளம், கோவில்குளம், கோவில் புதுக்குளம் என சிறுதும் பெரிதுமான குளங்களின் நீர் வாய்க்கால் வழியாக ஈறற்பெரிய குளத்தை அடைகிறது. இந்தக் குளங்கள் மூன்று தடவையாவது வான் பாய்ந்தால்தான் ஈரற்பெரிய குளம் ஒரு தடவை வான்பாயும். அவ்வளவு நீரைக் கொள்ளக்கூடிய இராட்சதக்குளம் இது. அதன் வான். கலிங்கல் எல்லாமே சோழர்கால கற்களின் அளவினதான பாறைகளைக் கொண்டு அமைந்திருக் கிறது. இயற்கையாக அமைந்த பாறைத் தொடர்களின் இடுக்குகளில் மட்டுமே கலவை கொண்டு கற்களை வைத்திருக் கிறார்கள். சாதாரணமாக மனிதர்களால் அந்தக்கற்களை நகர்த்த முடியாது.

இந்தக்குளம் நீராவி இயந்திரத்திற்கான நீரை தினசரி வழங்க வேண்டும் என்பதற்காக மேற்குளங்களை ஈறற்பெரிய குளம் வான் போடும்வரை அடைக்கக் கூடாது என ஒரு ஒப்பந்தம் எழுத்து மூலம் ஒவ்வொரு கிராம பெரியவர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஒப்பந்தம் எழுதப் பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் காரணமாக மேற்குளங்களின் கீழ் பயிர் செய்யும் விவசாயிகள் பெரிய அளவில் பாதிக் கப்படுகிறார்கள். நீராவி இயந்திரம் இல்லாமற் போய் பல ஆண்டுகள் கடந்து மூன்றாவது தலைமுறையும் வயதாகி நிற்கிறார்கள். என்றாலும் அந்த ஒப்பந்தம் செல்லாது என வாதாட யாரும் முயலவில்லை.

எனவே ஏறக்குறைய முன்னூறு விவசாயிகளுக்கு மேல் தமது விவசாயத் தில் பெரு நட்டமடைகிறார்கள். இது இலங்கையின் குடியேற்றத் திட்டங்களைப் போல தமிழர்களை பாதிக்கிறது. இதில் வேடிக்கை என்னவென்றால். மாமடுவ, மகாமயிலங்குளம் ஆகிய இரு சிங்களப் பிரதேச குளங்கள் அடைக்கப்பட்டுவிட்டன. மருதன்குளம் சமளங்குளம் போன்ற தமிழர்கள்குளத்தை அடைத்தால்உடனேயே வந்து திறந்து விடுகிறார்கள்.


# பொருண்மியத்தில் உங்கள் விளம்பரங்களைப் பிரசுரிக்க...

## கட்டணவிபரம்

| | கறுப்பு வெள்ளை | வர்ணம் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.10,000/- | ரூ.20,000/- |
| அரைப்பக்கம் | ரூ.6,000/- | ரூ.12,000/- |
| காற்பக்கம் | ரூ.3,500/- | ரூ.8,000/- |
| வரி விளம்பரம் | ரூ.3,500/- | ரூ.8,000/- |

தமிழர் பொருண்மியம்,
கிறீன் மீடியா ஹவுஸ்,
68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

வாட்ஸ் அப் இலக்கம் +94 777 920 384

# இலங்கைப் பொருளாதாரத்திற்கு கைகொடுக்கும் நல்லூர் திருவிழா

## பகுதி - 01





AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

நல்லூர், யாழ்ப்பாணத்தில் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் பிரம்மாண்டமான மத மற்றும் கலாச்சார நிகழ்வான நல்லூர் திருவிழா, இலங்கைப் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இந்தக் கட்டுரை பிரகாசமான திருவிழாவுக்கும் இலங்கையின் பொருளாதார நிலப்பரப்பிற்கும் இடையிலான நெருக்கமான உறவை ஆராய்கிறது.

ஞானத்தின் இந்து தெய்வமான முருகப் பெருமானுக்கு மரியாதை செலுத்தும் வகையில் கொண்டாடப்படும் நல்லூர் திருவிழா மத, பக்தி, கலாச்சார நிகழ்ச்சிகள் மற்றும் விழா சூழ்நிலையுடன் நிறைந்த 25 நாள் விழாவாகும். இது இலங்கை மற்றும் உலகம் முழுவதிலுமிருந்து பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதோடு உள்ளூர் மற்றும் தேசிய பொருளாதாரத்திற்கு கணிசமான பங்களிப்பை வழங்குகிறது.

உலகில் ஒவ்வொரு நாடும் தனது பொருளாதாரம் மற்றும் நாட்டு மக்களின் நன்மைகளினை கருத்திற்கொண்டு பல்வேறு செயற்பாடுகளினை தொடர்தேர்ச்சியாக செய்துவருவதனை நாம் பார்த்து வருகின்றோம். உதாரணமாக உலகக் கோப்பை ஊசளைஉமநவ, குழமுவ டீயடட, முடலஅிஉைள போன்ற பெரிய அளவிலான நிகழ்வினை ஒவ்வொரு நாடும் தனது நாட்டினில் நடத்துவதற்கு போட்டி போட்டுக் கொண்டு முன்வருவதனை நாம் அனைவரும் நன்கு அறிவோம். அதற்கு மிகமுக்கியக் காரணமாக இருப்பது அவ்வாறு நடாத்தும் எந்தவொரு நாட்டிக்கும் ஏற்படும் நேரடியான மற்றும் மறைமுகமான பல்வேறு பொருளாதார நன்மைகள் ஆகும்.

அதேபோல ஒவ்வொரு வருடமும் எமது அழகிய இலங்கைக்கும், நாட்டு மக்களுக்கும் கடவுளே அருள்பாலித்துக் கொடுத்திருக்கும் ஓர் சிறந்த வாய்ப்பே நல்லூர்க் கந்தசுவாமி கோவில் திருவிழா ஆகும். இதுவே முதலிடத்தினைப் பெறுகின்றது. நல்லூர்கந்தன் திருவிழா நடைபெறுவதற்கு முன்னைய மற்றும் பின்னைய காலத்தினை ஒட்டியே ஏனைய பல கோவில்களின் திருவிழாக்களும் வருகின்றன. உதாரணமாக நயினை நாகபூஷனி அம்மன் திருவிழா, மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்திருவிழா, சன்னதி முருகன் ஆலயத் திருவிழா, வல்லிபுர ஆழ்வார் கோவில் திருவிழா எனக் கூறிக்கொண்டே போகலாம். அதுமட்டுமல்லாது நல்லூர்க் கந்தன் திருவிழா நடைபெறும் காலங்களில் அந்த கந்தன் அருளால் சிறந்த காலநிலையும் அமைந்துவிடும். அதிக வெயிலோ மழையோ இல்லாமல், மக்களின் இயல்பு வாழ்விற்கு ஏற்றதாக அமையும் ஒரு சிறந்த காலமாக இருப்பதனையும் நாம் காலாகாலமாக கவனித்து வருகின்றோம். நாம் ஒவ்வொருவரும் கடந்த பல தசாப்தங்களாக ஏதோ ஒருவகையில் பல்வேறுபட்ட துன்பங்களினை அனுபவித்து வந்தே உள்ளோம். அப்படிப்பட்ட எங்களெல்லோரையும் தட்டிக்கொடுப்பதற்காகவே இந்த நல்லூர்க் கந்தசுவாமி கோவில் திருவிழா அமைகின்றது. இப்படிப்பட்ட ஒரு மிகச்சிறந்த அருமையான சந்தர்ப்பத்தினை நாம் ஒவ்வொருவரும் நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். அதன்வாயிலாக பல்வேறுபட்ட நன்மைகளினை நாம் நிச்சயமாக பெற்றுக் கொள்ள முடியும். யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்தத் திருவிழா இலங்கையின் வடபகு தியில் பிரம்மாண்டமாகக் கொண்டாடப்படும் ஒரு கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். முருகப் பெருமானுக்கு அர்ப்பணிக்கப்பட்ட இந்த பண்டிகைக்கு இலங்கையிலிருந்து மட்டுமல்லாது வெளிநாடுகளில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். ஆன்மீக மற்றும் கலாச்சார முக்கியத்துவத்திற்கு அப்பால் உள்ளூர் மற்றும் தேசியப் பொருளாதாரத்தை உயர்த்துவதில் இத்திருவிழா மாபெரும் பங்கு வகிக்கிறது. யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தினால் ஏற்பட்ட / ஏற்படுகின்ற பல்வேறு பொருளாதார நன்மைகளை பின்வருமாறு ஆராயலாம்.

1. சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் தொழில் - இவ்விழா இலங்கையின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் சகலரையும் ஈர்க்கும் ஒரு முக்கிய சுற்றுலா அம்சமாக செயல்படுகிறது. திருவிழாவின் போது பெரும் ஊர்வலங்கள், கலாச்சார நிகழ்ச்சிகள் மற்றும் சமயச் சடங்குகள் ஆகியவற்றைக் காண சுற்றுலாப் பயணிகள் குறிப்பாக யாழ். சுற்றுலாப் பயணிகளின் வருகையின் அதிகரிப்பினால் தங்குமிடம், போக்குவரத்து, உணவு மற்றும் சுற்றுலா தொடர்பான பிற சேவைகளுக்கான தேவைகளை அதிகரிக்க வழிவகுக்கிறது. இதன் விளைவாக ஹோட்டல்கள், கெஸ்ட்ஹவுஸ்கள் மற்றும் தனியார் தங்குமிடங்களுக்கும் அதிகத் தேவையும் அதனால் அதிகரித்த கேள்வி ஏற்படுவதனை காணலாம். இதன் விளைவாக இந்தத்திருவிழா சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையின் வருவாயில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கிவருவதுடன் வேலை வாய்ப்புகளை உருவாக்குகிறது மற்றும் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுகிறது.

2. சுற்றுலாத்துறைக்கு ஊக்கம்: இந்த திருவிழா உள்நாட்டு மற்றும் சர்வதேச சுற்றுலாப் பயணிகளுக்கு முக்கிய ஈர்ப்பாகும். விழாவின் பிரம்மாண்டத்தை கண்டு இரசிக்கவும், பிராந்தியத்தின் வரலாற்று தளங்களை ஆராயவும், அதன் தனித்துவமான கலாச்சார பாரம்பரியத்தை அனுபவிக்கவும் சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாணத்திற்கு வருகிறார்கள்.



சுற்றுலாப் பயணிகளின் இந்தப் பெருக்கம், விடுதிகள், உணவகங்கள் மற்றும் போக்குவரத்து சேவைகள் உள்ளிட்ட விருந்தோம்பல் துறைக்கு வருவாய் ஈட்டுகிறது.

**நல்லது, சுற்றுலாத்துறைக்கு ஊக்கம் பற்றிய உதாரணத்தை விரிவாகப் பார்ப்போம்.**

நல்லூர் திருவிழா மற்றும் சுற்றுலாத்துறை: நல்லூர் திருவிழா, சுற்றுலாத்துறைக்கு ஊக்கமளிக்கும் ஒரு சிறந்த உதாரணமாகும். இந்த விழாவின் போது:

» பல்வேறு நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகள்: இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற பல்வேறு நாடுகளிலிருந்து பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தருகிறார்கள்.

» பல்வேறு கலாச்சாரங்களை அனுபவிக்கும் வாய்ப்பு: இவர்கள் விழாவின் போது தமிழ் கலாச்சாரத்தை நேரடியாக அனுபவிக்கும் வாய்ப்பைப் பெறுகிறார்கள்.

» பிராந்திய பொருளாதாரம் மேம்பாடு: இதனால் யாழ்ப்பாணத்தின் விடுதிகள், உணவகங்கள், கடைகள் போன்றவற்றுக்கு வருவாய் அதிகரிக்கிறது.

» பிராந்தியத்தின் கலாச்சாரம் பரவுகிறது: இந்த விழாவின் மூலம் யாழ்ப்பாணத்தின் கலாச்சாரம் உலகெங்கிலும் பரவுகிறது.

இதர உதாரணங்கள்:

» கொழும்பு நகரம்: கொழும்பு நகரம், அதன் வரலாற்று கட்டடங்கள், கடற்கரை, ஷொப்பிங் மால்கள் போன்றவற்றால் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது.

» கண்டி நகரம்: கண்டி நகரம், தலதா மாளிகை, பொது உயன்கள் போன்றவற்றால் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது.

» அனுராதபுரம்: அனுராதபுரம், அதன் பௌத்த தொல்லியல் களங்கள் மற்றும் விகாரைகளால் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது.

» சிங்கிராலை தேசிய பூங்கா: சிங்கிராலை தேசிய பூங்கா, அதன் வனவிலங்குகள் மற்றும் அழகிய இயற்கை எழிலால் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது.

**சுற்றுலாத்துறைக்கு ஊக்கம் அளிப்பதன் நன்மைகள்:**

» பொருளாதார வளர்ச்சி: சுற்றுலாத்துறை, நாட்டின்பொருளாதார வளர்ச்சிக்கு பெரிதும் பங்களிக்கிறது.

» வேலைவாய்ப்பு உருவாக்கம்: விடுதிகள், உணவகங்கள், போக்குவரத்து போன்ற துறைகளில் வேலைவாய்ப்புகள் உருவாகின்றன.

» உள்கட்டமைப்பு வளர்ச்சி: சுற்றுலாத்துறை வளர்ச்சிக்காக உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுகின்றன.

» கலாச்சார பரிமாற்றம்: வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்கள் ஒன்றாகக் கூடி கலாச்சாரத்தை பரிமாறிக்கொள்கின்றனர்.

சுற்றுலாத்துறை, ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானது. நல்லூர் திருவிழா போன்ற நிகழ்வுகள், சுற்றுலாத் துறையை ஊக் குவிப்பதற்கான சிறந்த உதாரணங்களாகும்.

3. உள்ளூர் வணிகங்களுக்கு ஊக்கம் – திருவிழாவின் போது, நல்லூர்க் கந்தசுவாமி கோவிலை சுற்றியுள்ள தெருக்கள் பரபரப்பான சந்தைகளாக மாறும். ஏராளமான விற்பனையாளர்கள் தற்காலிக கடைகளை அமைத்து கலைப்பொருட்கள், பாரம்பரிய ஆடைகள், கைவினைப்பொருட்கள் மற்றும் உள்ளூர் சுவையான உணவுகள் உள்ளிட்ட பல்வேறு வகையான பொருட்களை விற்பனை செய்கின்றனர். இந்தத் துடிப்பான பொருளாதாரச் செயற்பாடு உள்ளூர் தொழில்முனைவோர் மற்றும்சிறு வணிகங்கள்தங்கள்தயாரிப்புக்களை காட்சிப்படுத்தவும் வருமானத்தை ஈட்டவும் ஒரு தளத்தை வழங்குகிறது. இந்த பெரும் திருவிழா உள்ளூர் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு ஊக்கமாகச் செயற்படுகிறது. ஏனெனில் அதிகரித்த மக்களின் தேவைகள் யாழ்ப்பாணம் மற்றும் அதைச் சுற்றியுள்ள வணிகங் களுக்கு அதிக விற் பனை மற்றும் இலா பமாக அமைகிறது.

4. சில்லறை விற்பனை மற்றும் வர்த்தக மறுமலர்ச்சி: திருவிழா காலத்தில் சில்லறை விற்பனை கணிசமாக அதிகரிக்கிறது. மத பொருட்கள், சுற்றுலாப் பொருட்கள், உடைகள் மற்றும் பிற பொருட்களின் விற்பனை கடைகள் மற்றும் சந்தைகளில் அதிகரிக்கிறது. உள்ளூர் கைவினைஞர்கள் மற்றும் கைவினைஞர்கள் தங்கள் பொருட்களுக்கான அதிகரித்த தேவையிலிருந்து பயனடைகின்றனர், இது உள்ளூர் பொருளாதாரத்திற்கு பங்களிக்கிறது.

5. வேலை வாய்ப்புக்கள் – யாழ் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்தத் திருவிழாவினால் அந்தப்பகுதியில் வசிக்கும் தனிநபர்களுக்கு தற்காலிக வேலை வாய்ப்புக்கான குறிப்பிடத்தக்க ஆதாரமாக விளங்குகிறது. இந்த நிகழ்விற்கு தளபாடங்கள், பாதுகாப்பு, சுகாதாரம், கூட்டத்தைக் கட்டுப்படுத்துதல் மற்றும் பிற அத்தியாவசிய சேவைகளை நிர்வகிப்பதற்கு பரந்த பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். நிகழ்வு மேலாண்மை, போக்குவரத்து, கேட்டரிங் மற்றும் சில்லறை விற்பனை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தற்காலிக வேலைகள் உருவாக்கப்படுகின்றன.

இந்த வேலை வாய்ப்புக்கள் ஏராளமான தனிநபர்களுக்கு (குறிப்பாக குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு) வாழ்வாதாரத்தை வழங்குகிறது. திருவிழாவினால் வேலைவாய்ப்பில் ஏற்படும் நேர்மறையான தாக்கம், வறுமைக் குறைப்புக்கு மேலும் பங்களிப்பதோடு உள்ளூர் சமூகத்தின் ஒட்டுமொத்த சமூகப் பொருளாதார நல்வாழ்வை மேம்படுத்துகிறது.

வேலைவாய்ப்புகள்: விற்பனையாளர்கள், பாதுகாப்புப் பணியாளர்கள், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் உள்ளிட்ட பல்வேறு தனிநபர்களுக்கு திருவிழா தற்காலிக வேலைவாய்ப்புகளை உருவாக்குகிறது. இது உள்ளூர் வருமானத்தை அதிகரிக்கிறது மற்றும் வாழ்வாதார ஆதரவை வழங்குகிறது.

நல்லூர் திருவிழாவின் போது ஏற்படும் வேலைவாய்ப்புகள் பற்றி தெரிந்து கொள்வது மிகவும் சுவாரசியமானது. இந்த விழா வெறும் மத நிகழ்வு மட்டுமல்ல, உள்ளூர் பொருளாதாரத்திற்கு ஒரு பெரிய பங்களிப்பைச் செய்யும் ஒரு நிகழ்வு.

நல்லூர் திருவிழாவின் போது வேலை வாய்ப்புகள் எவ்வாறு உருவாகின்றன என்பதையிட்டு அடுத்த வாரம் பார்ப்போம்:



# தன்னம்பிக்கையை இழக்காத நம்பிக்கை மனிதன்

## நேர்கண்டவர் - ஞானம் கவினி

**காலம் காலமாக வறுமை என்று சொல்லி ஒரு போர்வைக்குள் நாங்கள் ஒழிந்து கொண்டிருக்காமல் வெளியே வந்து ஏதாவது நமக்குத் தெரிந்த ஓர் தொழிலை கையில் எடுத்து செயலாற்ற தொடங்கினால் அந்த தொழில் நம்மை வழிநடத்திக் கொண்டே இருக்கும் .நாங்கள் செல்ல வேண்டிய பாதையை அது எங்களுக்கு காட்டும்**

உலக வரலாறுகள் எங்கு பார்த்தாலும் போரும் போர் சார்ந்த சூழல்களும் எப்போதும் அந்த சமூகத்தின் மக்களை வஞ்சிப்பனவாகத்தான் இருந்திருக்கிறது.

அப்படித்தான் தமிழர்களுடைய வாழ்வியலை பேசுகின்ற வன்னிப்பிர தேசமெங்கும் ஒவ்வொரு முயற்சியாளரின் கதையும் விரிந்து கிடக்கிறது.

காலம் காலமாக விவசாய பூமியிலே வாழ்ந்து வந்தாலும் போருக்கு பிறகான அவர்களுடைய வாழ்தல் மிகவும் துயர் மிகுந்ததாகவேஅமைந்திருக்கின்றது..

புல் முளைக்க கூட அஞ்சுகின்ற ஒரு தேசத்தின் குடிமக்கள்,

மீண்டும்தங்களுடைய சொந்த நிலத்தில் விவசாயங்களையும் தமது நிலங்களில் பச்சையங்களையும் உருவாக்குகின்ற வலிமை மிகுந்தவர்களாக காணப்படு கிறார்கள்.

சாம்பலில் நின்று எழும் பீனிக்ஸ் பறவைகளை போல அவர்கள் இன்று தம்மைதகவமைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

அப்படித்தான் போரின் போது அங் கங்களை இழந்தாலும் நம்பிக்கையை இழக்காத மனிதனின் கதை இது.

இலங்கை தேசத்தின் வடக்கே வன் னியின் பெருங்கதைகளை பேசும் நகரங்களில் ஒன்றுதான் விசுவமடு . முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகவும் போர் நெருக்கடிக்கு உள்ளான விசுவமடு பிரதேசத்தின் தொட்டியடி என்ற விவசாய கிராமத்தில்

ஒரு சிறந்த விவசாயியாக மாத்திரமன்றி மிகச்சிறந்த சுய தொழில் முனைவோராகவும் பலருக்கு வழிகாட்டியாகவும் இருக்கிறார் தங்கமயில் செல்வச்சேந்தன்.

செல்வச்செந்தன் சிறிய வயதிலேயே தனது அவயவங்களை இழந்து போனாலும் நம்பிக்கையை இறுகப் பிடித்தபடி இன்றும் தனது மனைவி இரண்டு மக்கள் என்று அவர்களுடைய வாழ்வாதாரத்துடன் நின்றுவிடாமல் தான் சார்ந்து வாழ்கின்ற பலருக்காகவும் ஓடிக்கொண்டிருக்கிறார் .


ஓயாது குடும்பத்தின் நன்மைகளுக்காக ஓடிக்கொண்டிருக்கும் மனைவி எனக்கு ஒரு சிறந்த கொடை என்று நம்பும் செல்வச்சந்திரன் தனது குழந்தைகளின் கல்வியில் அதிக அக்கறை காட்டுகின்றார். தனது வீட்டில் பயிரிடப்பட்டிருக்கும் விவசாய பயிர்களில் கெக்கரியினை மிகவும் அருமையாக செய்திருக்கிறார் செல்வச் சேந்தன்.

அதிகாலையில் எழுந்து தண்ணீர் கட்டுவது ,பசளை இடுவது, விளைபொ ருட்களை சேகரிப்பது அவற்றை சந்தைக்கு எடுத்துச் செல்வது என்று விவசாயத்தில் அத்தனை வேலைகளையும் கவனிக்கும் இவர்,தனது குடும்பத்தின்பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக மனைவியோடு சேர்ந்து இட்லி மற்றும் பாரம்பரிய உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து கடைகளுக் கும் தேவை உடையவர்களுக்கும் விநியோகித்து வருகிறார்.

போர் முடிவுக்கு வந்த சில காலங்களில் என்ன செய்வது என்று தெரியாமல் யோசித்துக் கொண்டிருந்த பொழுது மனைவியின் நம்பிக்கையோடு இந்த சிறிய தொழிலை ஆரம்பித்திருக்கிறார்கள் இந்த குடும்பத்தினர்.

ஆரம்பத்தில் உற்பத்தி செய்தல் மற்றும் விநியோகித்தல் சந்தைப்படுத்துதல் போன்ற துறைகளில் மிகவும் இடர்பாடுகள் இருந்தாலும் தற்போது அவைகளில் எல்லாம் தேர்ச்சி பெற்று விட்டதாக நம்புகிறேன் என்று சிரிக்கிறார்.

இப்போதும் பிரத்தியேகமாக அவருக்கு கொஞ்சம் மாற்றி செய்யப்பட்ட ஒரு மோட்டார் சைக்கிளில் தனது சந்தைப்படுத்தல்



செல்வச்சேந்தன்

பணியினை தொடர்ந்து கொண்டிருக்கிறார். மழைக்காலங்களில் கிடங்கும் பள்ளமான வீதிகளில் வாகனத்தை இயக்கி செல்வது மிகவும் கடினமாக இருக்கிறது என்கின்ற இவர் , தனது சந்தைப்படுத்தலுக்காக வேறு ஏதாவது வாகனத்தை கொள்வனவு செய்ய வேண்டும் என்றும் எண்ணுகிறார்.

இயல்பிலேயே துடிப்பு ஆர்வமும் உள்ள செல்வசேந்தன் உதயலேகா தனது இளமை காலங்களில் தொண்டர்ஆங்கில ஆசிரியராக பணிபுரிந்த போதும் தொடர்ச்சியாக ஊதியம் இல்லாத அந்த பணியினை தொடர முடியாது போனது என்று கவலைப்படுகிறார் .ஆனாலும் இன்னும் இவரது முயற்சிகளில் ஒன்றும் குறை இருக்கவில்லை.

தங்களோடு வாழ்ந்து பாரம்பரிய உணவுகளை தமக்கு அறிமுகப்படுத்திய தமது உறவான பூட்டியம்மாவின் நினை வாக பூட்டியம்மா சிறு கைத்தொழில் அகம் ஒன்றினை உருவாக்கி அதனூடு எட்டுக்கு மேற்பட்ட பாரம்பரிய உணவுகளை சமூகத்தில் அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள்.

தற்போது உணவு உற்பத்தி செய்யும் பல நிறுவனங்கள் சந்தையில் இருந்தாலும் தமது உற்பத்தி பொருட்க ளுக்கான கேள்வி

இன்னும் கூடிக்கொண்டு தான் இருக்கின்றது என்று மகிழ்ச்சியோடு சொல்கின்றனர்.

எப்போதும் பாரம்பரிய உணவுகளின் தரம் மாறாமல் சுவை குன்றாமல் அதே நறுமணத்தோடும் சுவையோடும் மக்களுக்கு கொடுக்கும்போது அவர்கள் என்றைக்கும் எம்மையும் எமது உற்பத்திகளையும் மறக்க மாட்டார்கள்.

தற்போது வகை வகையான கோபித்தூள்களும் வகை வகையான சத்து மாக்களும் சந்தையில் விற்பனைக்கு வந்திருந்தாலும் தனித்துவமான வாசனையோடும் சுவையோடும் காலம் காலமாக நமது அம்மா ,பாட்டி ,பூட்டி என்று அத்தனை பேரும் நமக்கு சொல்லித் தந்த கைவி னையோடும் இருக்கிறது நமது உற்பத்தி பொருட்கள். ஆகவே எமது உற்பத்தி பொருட்களின் சந்தைப்படுத்தலை பற்றி நாங்கள் இப்போது கவலைப்படுவதில்லை என்று மகிழ்ச்சியாக கூறுகின்றார்.

சில வேளைகளில் மூலப் பொருட்களை பெற்றுக் கொள்வது கடினமாக இருக்கும்,

இரண்டு மூன்று தரங்களில் மூலப் பொருட்கள் இப்போது கிடைக்கின்றது. ஆனால் நாங்கள் எப்பொழுதும் முதல் தரமான பொருட்களை கொள்வனவு செய்கின்றோம் ,ஏனென்றால் எங்களுடைய வாடிக்கையாளர்கள் நமது உற்பத்தியை நம்பி வாங்கிச் செல்கிறார்கள். இங்கே வாங்கப்படுகின்ற உற்பத்திகள் வெளி நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றது. அத்தோடு மட்டுமன்றி நோயாளிகள் குழந்தைகள் மாற்றுவலு உள்ளவர்கள் மற்றும் குழந்தை பெற்ற தாய்மார் என்று பலரும் இதனை உட்கொள்கின்றனர், அதனால் நாங்கள் மிகவும் அவதானத்துட னும் சரியான நிதானத்துடனும் ஒவ்வொரு பொருட்களையும் உற்பத்தி செய்கின்றோம்.

ஒரு தடவை பூட்டியம்மா சிறு கைதொழிலகத்தில் உற்பத்திகளை பெற்றுக் கொண்டவர்கள் மறக்காமல் நம்முடன் தொலைபேசியில் பேசியிருக்கிறார்கள். அத்தோடு தமக்கு தேவையான பொருட்களை ஆர்டர் செய்கிறார்கள்.

எமது உற்பத்தி பொருட்களை வாங்கி சென்றவர்கள், அதன் தரத்தையும் சுவையையும் குறித்து சிலாகித்து பேசும்போது இந்த உற்பத்தி நிலையத்துக்காக நாங்கள் பட்ட எல்லா கஷ்டங்களும் முடிவுக்கு வந்ததைப் போல ஒரு மனதிருப்தி கிடைக்கின்றது.

எப்போதும் நல்ல வாடிக்கையாளர்களை தக்க வைக்க வேண்டும் என்றால் நாங்கள் நிறைய கற்றுக் கொள்ள வேண்டி இருக்கிறது. வாடிக்கையாளர்களுக்கு என்ன தேவை இருக்கிறது? அவர்கள் எப்படிப்பட்ட பொருட்களை நுகர்வு செய்ய ஆயத்தமாக இருக்கிறார்கள் என்று முதலில் நாங்கள் ஆராய வேண்டி இருக்கிறது அத்தோடு சந்தையில் இந்த பொருட்களுக்கான விலை எப்படி இருக்கிறது நமது பொருட்களோடு ஒப்பிடும்போது போட்டியாளர்களின் பொருட்களின் தரம் எப்படி இருக்கிறது என்று பலவாறாக

அலசி ஆராய்ந்து நமது பொருட்களை மேலும் தரமிக்கதாக கொடுக்கக் கூடியதாக இருக்கின்றது.

ஆனாலும் என்னதான் ஓடி ஓடி உழைத்தாலும் தேவைகளை தேவைகள் இன்னும் கூடிக் கொண்டே தான் இருக்கிறது தற்போது நாங்கள் எங்களுடைய சமையல் கூடத்தை மிகவும் விஸ்தரிக்க வேண்டிய ஒரு கட்டத்தில் இருக்கின்றோம் . மிக விரைவாக அதை முடித்து விடுவோம் என்று நம்புகிறேன் அதற்காக சிறுக சிறுக சேமித்துக் கொண்டிருக்கிறோம் என்று கூறிய

செல்வசேந்தன் உதய லேகாவிடம்

இந்த உற்பத்தி நிலையத்தினை உருவாக்குவதில் இருந்து இன்றைய வளர்ச்சி வரைக்கும் உங்களுக்கு உதவிய அரசு , அரசுசார்பற்ற நிறுவனங்கள் ஏதாவது இருக்கிறதா என்று வினாவினோம்.

ஆரம்பத்தில் சில இடங்கள் இருந்தாலும் இப்போது

அரசு நிறுவனங்களும் கிரிசரிஸ் போன்ற அரசு சார்பற்ற நிறுவனங்களும் எமக்கு பெரிதும் துணை நிற்கின்றன.

பயிற்சி வகுப்புகள் கண்காட்சிகள் விற்பனை கூடங்கள் என்று பல வழிகளில் அவை நம்மை ஊக்கப்படுத்துகின்றன . என்கிறார் உதய லேகா.

உண்மையிலேயே முழு குடும்பமும் ஒற்றுமையாக சேர்ந்து ஒரு தொழில் கூடத்தை நடத்துவதை நாங்கள் இங்கே பார்த்தோம் .அவர்கள் மிகவும் உற்சாகமாகவும் சந்தோஷமாகவும் இந்த வேலைகளை செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தங்களுடைய வேலைகளை பங்கிட்டு கொள்வதற்கு அயலில் உள்ளவர்களுக்கும் சில நேரங்களில் வேலைகளை கொடுத்து உதவுகிறார்கள்.

இதனால் பூட்டியம்மா சிறுகைத் தொழில் உற்பத்தி நிறுவனத்தின் ஊடாக அயலில் உள்ள பெண்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கிறது .வேலை வாய்ப்பு மாத்திரமன்றி நல்ல ஆரோக்கியமான உணவும் அருகிலேயே கிடைப்பதால் அந்த கிராமத்து மக்களும் அவர்களை மகிழ்ச்சியுடன் வாழ்த்துகிறார்கள்.

காலம் காலமாக வறுமை என்று சொல்லி ஒரு போர்வைக்குள் நாங்கள் ஒழிந்து கொண்டிருக்காமல் வெளியே வந்து ஏதாவது நமக்குத் தெரிந்த ஒர் தொழிலை கையில் எடுத்து செயலாற்ற தொடங்கினால் அந்த தொழில் நம்மை வழிநடத்திக் கொண்டே இருக்கும் .நாங்கள் செல்ல வேண்டிய பாதையை அது எங்களுக்கு காட்டும் என்று சொல்கிறார் உதய லேகா.

பொருளாதாரத்தில் முடங்கி கிடக்கின்ற பல குடும்பங்களுக்கு கை கொடுக்க



நினைக்கின்ற பெண்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள் என்று வினா வினோம்?

இதைப் பற்றி இப்போது சொல்வதற்கு என்ன இருக்கிறது எங்களுடைய குடும்பத்தில் பிரச்சனை இருந்தால் அதை தீர்ப்பதற்கான வழிகளை நாங்கள் தான் கண்டுபிடிக்க வேண்டும் எப்படி எங்களுடைய வறுமையை போக்கலாம் என்று நாங்கள் சிந்தித்தால் போதும் பல வழிகள் எங்களுக்கு முன் தோன்றும் .சில வேளைகளில் கை கொடுப்பதற்கு யாருமே இல்லாத காரணத்தால் பல பெண்கள் வீட்டிற்குள் முடங்கி கிடப்பதும் உண்டு ..

ஆனால் தற்போது பிரதேச செயலகங்களில் சிறு கைத்தொழில் அபிவிருத்தி பிரிவு மிகவும் சிறப்பாக இயங்கி வருகின்றது தற்போது யாராவது சுயதொழில் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று எண்ணினால் அவர்கள் அவர்களுடைய பிரதேசத்தில் இருக்கின்ற சுய தொழில் முயற்சி பிரிவு உத்தியோகத்தற்களை சந்தித்தால் போதும் அவர்கள் இவர்களுக்கான சகல வழிகளையும் உருவாக்கிக் கொடுக்கிறார்கள். நேரம் பொன்னானது வீட்டில் கிடைக்கின்ற நேரங்களை நாங்கள் மிகப் பிரயோசனமாக செலவழித்தால் நிச்சயமாக வறுமை நம்மை எட்டியும் பார்க்காது மிகவும் உற்சாகத்தோடு கதைக்கும் இவர்களை பார்த்த போது நம்மையும் உற்சாகம் தொற்றிக் கொள்கிறது.

"சரி இறுதியாக எங்களுக்காக ஏதாவது சொல்லுங்கள்" என்று கேட்டபோது.... இப்படி நீங்கள் எல்லாம் உற்சாகமாக எங்களோடு கதைத்து எங்களை பாராட்டும் போது இன்னும் நிறைய நிறைய சாதிக்க வேண்டும் என்ற உற்சாகம் நமக்குள் வருகின்றது என்கிறார்.

கைத்தொழில் ஒன்றை கற்றுக்கொள் கவலை உனக்கில்லை ஒத்துக்கொள் என்று நம்பிக்கையோடு சிரிக்கின்ற செல்வச்சந்திரன் உதய லேகா குடும்பத்திடம் இருந்து மகிழ்ச்சியோடும் நம்பிக்கையோடும் நாங்கள் விடைபெற்றோம்.

# நேரம் பார்த்து பணியாற்றும் உயர் அதிகாரியா நீங்கள்?

## அவதானமாகச் செயற்படுங்கள்!

க.கணபதிப்பிள்ளை



நிறுவனங்களில் உயர் பதவிகளில் இருப்பவர்கள் நேரம் பார்த்துத்தான் பணியாற்ற வேண்டுமா? நிறுவனங்கள் இதனை எவ்வாறு கட்டுப்படுத்துகின்றன?

பொதுவாக தமது பணியை அவர்கள் செம்மையாகச் செய்ய வேண்டும் என்பது மட்டும்தான் அவர்களிடம் எதிர்பார்க்கப் படுகின்றது. அதற்காக அவர்கள் இன்ன நேரத்துக்குத்தான் பணியாற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுவதில்லை.

எட்டு மணி நேரம்தான் வேலை. மாலை 6.00 மணிக்குப் பின்னர் நான் வேலை செய்ய முடியாது என்று அவர்கள் பிடிவாதம் பிடிக்க முடியாது. தேவை ஏற்பட்டால் எந்த வேளையிலும் அவர்கள் பணியாற்றத் தயாராக இருக்க வேண்டும்.

உலகின் மிகப் பெரிய காபி விற்பனை நிறுவனமான 'ஸ்டார்பக்ஸ்" நிறுவனத்தில் அண்மையில் நடைபெற்ற ஒரு நிகழ்வு இதற்கு உதாரணம். அங்கு சி.ஈ.ஓ. வாக அதாவது பிரதம நிறைவேற்று அதிகாரியாகப் பணியாற்றிய ஒருவர் பணியிலிருந்து நிறுத்தப்பட்டார். அதற்கும் இதுதான் காரணமாகச் சொல்லப்பட்டது.

இந்தியரான லக்ஷ்மன் நரசிம்மனை சி.ஈ.ஓ-வாக நியமித்தது அந்த நிறுவனம். ஆனால், ஓராண்டுதான் ஆகி இருக்கிறது. இதற்குள்ளாக லக்ஷ்மன் நரசிம்மனை நீக்கி விட்டு சிபொடில் மெக்ஸீகன் கிரில் நிறுவனத்தின் சிஈஓ-வாக இருந்த பிரைன் நிக்கோலை தனது புதிய சிஈஓ-வாக ஸ்டார்பக்ஸ் நியமித்துள்ளது.



அமெரிக்காவில் 1971-ம் ஆண்டு தொடங்கப்பட்ட ஸ்டார்பக்ஸ், இன்று 80 நாடுகளில் 35,711 கடைகளைக் கொண்டிருக்கிறது. நிறுவனச் செயல்பாடுகளை வளர்த்தெடுக்க 2023 மார்ச் மாதம் லக்ஷ்மன் நரசிம்மன் சிஈஓ-வாக நியமிக்கப்பட்டார். நரசிம்மன் 1967ம் ஆண்டு புனேயில் பிறந்தவர். இயந்திரவியல் பொறியியல் முடித்தவர். மெக்கின்ஸி, பெப்சிகோ உள்ளிட்ட முன்னணி நிறுவனங்களில் பணிபுரிந்தவர். ஸ்டார்பக் ஸின் சிஈஓ-வாக நியமிக்கப் படுவதற்கு முன்பாக ரெக்கிட் நிறுவனத்தின் சிஈஓ-வாக இருந்தார்.

இவரது தலைமையின் கீழ் ஸ்டார்பக்ஸ் நிறுவனத்தின் செயல்பாட்டில் புதுமை கொண்டுவரப்படவில்லை என்றும் இதன் காரணமாக விற்பனை குறைந்துள்ளது என்றும் கூறப்பட்டு வந்தது. இந்நிலையில், முதலீட்டாளர்கள் புதிய சிஈஓ-வை நியமிக்க வேண்டும் என அழுத்தம் கொடுத்து வந்தனர்.

இதனிடையே நரசிம்மன் சமீபத்தில் அளித்த பேட்டி ஒன்றில், "நான் மாலை 6 மணிக்கு மேல் அலுவலக வேலைகளை பார்க்க மாட்டேன். மிக முக்கியமான வேலை என்றால் மட்டுமே 6 மணிக்கு பிறகும் அதில் தொடர்வேன்" என்றார். அவரது இந்தக் கருத்துக்கு எந்த அளவுக்கு ஆதரவு இருந்ததோ அதே அளவுக்கு எதிர்ப்பும் இருந்தது.

"ஒரு நிறுவனத்தின் சிஈஓ 6 மணிக்கு பிறகு வேலை பார்க்க மாட்டேன் என்று சொன்னால், அந்த நிறுவனம் எப்படி வளர்ச்சி அடையும்" என்று பலர் கேள்வி எழுப்பினர். இந்தச் சூழலில், அவரை சிஈஓ பொறுப்பிலிருந்து ஸ்டார்பக்ஸ் நீக்கியுள்ளது.

ஆக பெரிய நிறுவனங்கள் உயர் அதிகாரிகள் நேரம் பார்க்காமல் செயற்பட வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றன. அதற்கான ஊதியமும் மேலதிக வசதிகளும் அவர்களுக்குச் செய்து கொடுக்கப்படும். பொறுப்பு வாய்ந்த அதிகாரி என்ற முறையில் - நேரம் என்பதைவிட தமது கடமை - பொறுப்பு என்பதற்கே அவர் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதுதான் நிறுவனத்தின் எதிர்பார்ப்பு!

# மின்னல் தாக்குதல்களை தணிக்கும் பனை மரங்கள்

**மின்னல் தாக்குதல்களைத் தணிப்பதில் பனை மரங்களின் பங்கு, சுற்றுச்சூழல் சவால் களுக்கு இயற்கை எவ்வாறு தீர்வுகளை வழங்குகிறது என்பதற்கு ஒரு சுவாரஸ்யமான உதாரணம். இந்த இயற்கையான பாதுகாப்புகளைப் புரிந்து கொள்வதன் மூலம், மின்னலின் ஆபத்துக்களில் இருந்து மனித உயிர்களையும் உடைமைகளை யும் பாதுகாப் பதற்கான உத்தி களை நாம் உருவாக்கலாம்.**

இனியன்





மின்னல் ஏன் எப்போதும் பனை மரம் மீதே விழுகிறது தெரியுமா? அதுக்கு ஒரு ஸ்பெஷல் காரணம் இருக்காம்...! நாம் சிறுவயது முதலே பனை மரங்களில் இடி விழுவதை பார்த்திருப்போம். பனை மரங்கள் மின்னல் தாக்குதல்களைத் தணிக்கும் தனித்துவமான திறனைக் கொண்டுள்ளன.

இது விஞ்ஞானிகளை பல நூற்றாண்டுகளாக சிந்திக்கத் தூண்டும் செயலாகும். இந்த இயற்கை பாதுகாப்பு பொறிமுறையானது வெப்பமண்டல மற்றும் மிதவெப்ப மண்டல பகுதிகள் போன்ற அடிக்கடி இடியுடன் கூடிய மழை பெய்யும் பகுதிகளில் பாதுகாப்பு அரணாக உள்ளது.

உதாரணமாக, இந்தியாவின் ஒடிசா மாநிலம், மின்னல் தாக்குதல்களை எதிர்த்துப் போராடுவதில் பனை மரங்களின் நன்மைகளை சார்ந்துள்ளது மற்றும் இறப்புகளைக் குறைக்க பெரிய அளவில் இந்த மரத்தை பயிரிடத் தொடங்கியுள்ளது.

மின்னல் தாக்குதல்களைத் தணிப்பதில் பனை மரங்கள் திறம்பட செயல்பட முதன்மையான காரணங்களில் ஒன்று அவற்றின் அதிக ஈரப்பதம் ஆகும். பனை மரங்களின் தண்டுகளில் நீர் மற்றும் சாறு நிரம்பியுள்ளது, இது மின்னல் தாக்கத்திலிருந்து மின்சாரத்தை உறிஞ்சி வெளியேற்றும். இந்த அதிக ஈரப்பதம் இயற்கையான கடத்தியாக செயல்படுகிறது, இதனால் மின்னல் மரத்தின் வழியாகவும் தரையிலும் குறிப்பிடத்தக்க சேதத்தை ஏற்படுத்தாது.

மின்னல் தாக்குதல் தொடர்பான இறப்புகளின் எண்ணிக்கையை எதிர்த்துப் போராட 1.9 மில்லியன் பனை மரங்களை நடுவதற்கு அரசாங்கம் ஒடிசா அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது. பனைமரத்தின் உயரம் பனை மரங்களின் மற்றொரு சுவாரஸ்யமான அம்சம் ஆகும். பனை மரங்கள் பெரும்பாலும் சுற்றியுள்ள தாவரங்களை விட உயரமானவை, இதனால் அவை மின்னலால் தாக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

இது ஒரு பாதகமாகத் தோன்றினாலும், இது உண்மையில் அருகிலுள்ள மற்ற தாவரங்கள் மற்றும் கட்டமைப்புகளைப் பாதுகாக்க உதவுகிறது. மின்னல் தாக்குதல்களை ஈர்ப்பதன் மூலம், பனை மரங்கள் இயற்கை மின்னல் கம்பிகளாகச் செயல்படுகின்றன, மேலும் பாதிக்கப்படக்கூடிய இலக்குகளிலிருந்து மின்சார ஆற்றலைத் திசைதிருப்புகின்றன. மற்ற மின்னல் பாதுகாப்பு கிடைக்காத கிராமப்புறங்களில் இந்த பாதுகாப்புப் பங்கு மிகவும் முக்கியமானது.

மின்னல் தாக்குதல்களைத் தணிப்பதில் பனை மரங்களின் செயல்திறன் பல்வேறு அரசாங்கங்கள் மற்றும் அமைப்புகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இது காலநிலை மாற்றம் மற்றும் அதிகரித்து வரும் வெப்பநிலை காரணமாக அதிகரித்து வரும் மின்னல் தொடர்பான இறப்புகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான ஒரு பரந்த திட்டத்தின் ஒரு பகுதியாகும். மாநிலத்தின் புவியியல் இருப்பிடம் மற்றும் தட்பவெப்ப நிலை ஆகியவை குறிப்பாக மின்னல் தாக்கங்களுக்கு ஆளாகின்றன,

பனை மரங்கள் மின்னல் தாக்குதல்களைத் தாங்கும் திறன், அவற்றின் செயல்திறனுக்கு பங்களிக்கும் மற்றொரு காரணியாகும். பெரும்பாலான பனை மரங்கள் மின்னல் தாக்கத்தை கடுமையான சேதம் இல்லாமல் தாங்கும். அவற்றின் அடர்த்தியான பட்டை மற்றும் கடினமான இலைகள் தாக்குதலின் வெப்பம் மற்றும் சக்தியிலிருந்து அவற்றைப் பாதுகாக்க உதவுகின்றன, அவை தொடர்ந்து வளரவும் பாதுகாப்பை வழங்கவும் அனுமதிக்கிறது.

பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் மின்னல் தாக்குதலைத் தணிக்க பனை மரங்களை ஒரு நிலையான மற்றும் நீண்ட கால தீர்வாக மாற்றுகிறது. மின்னல் தாக்குதல்களைத் தணிப்பதில் பனை மரங்களின் பங்கு, சுற்றுச்சூழல் சவால்களுக்கு இயற்கை எவ்வாறு தீர்வுகளை வழங்குகிறது என்பதற்கு ஒரு சுவாரஸ்யமான உதாரணம். இந்த இயற்கையான பாதுகாப்புகளைப் புரிந்துகொள்வதன் மூலம், மின்னலின் ஆபத்துக்களில் இருந்து மனித உயிர்களையும் உடைமைகளையும் பாதுகாப்பதற்கான உத்திகளை நாம் உருவாக்கலாம்.

# மண்பரிசோதனை எதற்காக செய்ய வேண்டும்

**மண் வளத்தை பாதுகாக்க மண் பரிசோதனை செய்து, மண்ணில் உள்ள Ph தன்மையை அறிந்து பரிந்துரைக்கப்பட்ட அளவு கனிம உரங்களையும், இயற்கை உரங்களையும் தேவைக்கு ஏற்றால் போல் உபயோகிக்க வேண்டிய கட்டாய தருணத்தில் உள்ளோம்.**

பூரணி



மண்ணில் உள்ள சத்துக்கள் அதாவது கார அமிலத்தன்மை எந்த அளவில் உள்ளது என்பதனை அறிந்து. பயிர் செய்வதற்காகவே. மண் பரிசோதனை செய்யப்படுகின்றது. பயிர்களின் உற்பத்தி திறனை அதிகரிக்க வேண்டியுள்ள கட்டாய தருணத்தில் மண் வளத்தை பாதுகாக்க வேண்டியது நமது தலையாய கடமையாகும். விளை நிலங்களில் பயிர்ச்செய்கை பரப்பு குறைந்து வருகிறது. மண் வளத்தை சரியாக பாதுகாக்காததால் பயிர் விளைச்சல் குறைந்து வருகிறது.

மண் வளத்தை பாதுகாக்க மண் பரிசோதனை செய்து, மண்ணில் உள்ள PH தன்மையை அறிந்து பரிந்துரைக்கப்பட்ட அளவு கனிம உரங்களையும், இயற்கை உரங்களையும் தேவைக்கு ஏற்றால் போல் உபயோகிக்க வேண்டிய கட்டாய தருணத்தில் உள்ளோம்.

மண்ணின் PH என்பது கார அமில தன்மையின் அளவீடாகும். இந்த PH தன்மையே குறிப்பிடத்தக்க அளவு பயிர் வளர்ச்சி, மற்றும் விளைச்சலை தீர்மானிக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். பொதுவாக PH 7 இல் இருந்தால் இது நடுநிலை மண்ணாகக் கருதப்படுகிறது, PH 7 க்கும் குறைவாக இருக்கும்போது அது அமில மண்ணாகக் கருதப்படுகிறது, PH 7 க்கு மேல் இருக்கும்போது அது கார மண்ணாகக் கருதப்படுகிறது. பெரும்பாலான பயிர்கள் வளரக்கூடிய மற்றும் அதிக விளைச்சல் தரக்கூடிய சிறந்த PH 5.5 - 6.7 ஆகும். இந்த அளவில் உள்ள மண். எல்லா பயிர் செய்கைக்கும் உகந்தது. இதே மண்ணில் காரத்தன்மை PH 8 க்கு மேல் அதிகரித்தால், பயிருக்குத் தேவையான சத்துக்கள் கிடைக்காத நிலை ஏற்படுகிறது.

இதனால் பயிரின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு விளைச்சலும் குறைகின்றது. அதுபோன்று மண்ணின் PH 5 க்கும் குறைவான அமில மண்ணில் பயிர்களை வளர்ப்பதால்.



பயிர்களின் வளர்ச்சிக்கு தேவையான நைட்ரஜன் (N), பொஸ்பரஸ் (P), பொட்டாசியம் (k), கால்சியம் (Ca), மெக்னீசியம்(Mg), கந்தகம்(S) ஆகியவை மண்ணில் இருக்கும் பயிர்களுக்கு குறைவாக கிடைக்கிறது. இதனால் பயிரின் வளர்ச்சியும் விளைச்சலும் பாதிக்கப்படும். எனவே, பயிருக்கு பசளைகளை பயன் படுத்துவதற்கு முன்பு அமிலத்தன்மை யைக் குறைத்து நடுநிலைக்கு கொண்டு வருவது மிக முக்கியம். இந்த வகையில் மண்ணில் PH குறைவாகவோ அல்லது அமிலத்தன்மை அதிகமாகவோ இருந தால்தான் டோலமைட்டை (Dolomite) பயன்படுத்துகின்றோம்.

இதனால் PH நடுநிலையாக இருக்கும். டோலமைட்டின் (Dolomite ) பயன்பாடு மண்ணில் போசணை கிடைப்பதை அதிகரிக்கிறது, மண்ணில் நன்மை பயக்கும் மண் நுண்ணுயிரிகளின் செயல்முறையை துரிதப்படுத்துகிறது. நுண்ணுயிரிகளின் விரைவான செயற்பாடு காரணமாக சேதனப் பொருட்களின் சிதைவடைதல் துரிதப்படுத்தப்படுகின்றது. மற்றும் மண்ணை வளமாக்குகிறது.

மண்ணில் இயற்கையான நைட்ரஜனை (N)அதிகரிக்கும் பாக்டீரியா செயல்பாடு அதிகரிக்கும். கால்சியம் (Ca) மற்றும் மெக்னீசியம் (Mg) நுண்சத்துக்களும் டோலமைட் பயன்பாட்டால் மண்ணுக்கு கிடைக்கின்றது. இதுபோன்று ஆட்டு எரு மற்றும் மண்புழு உரம் போன்றவற் றையும், பயறு, அவரை, துவரை சார்ந்த பயிர்களை நடுவதன் மூலம் மண்ணில் உள்ள ீஉ தன்மையை சமநிலைக்கு கொண்டுவர இயலும் டோலமைட் மூலம் மண்ணின் அமிலத்தன்மையை சமநிலைக்குக் கொண்டுவருவதாக இருந்தால் 1 ஏக்கருக்கான அளவீடுகள்.

< 3.86 - (PH) - 800kg 3.86 - 4.62 - (PH) - 600Kg 4.63 - 4.99 - (PH) - 500Kg 5.00 - 5.37 - (PH) - 400Kg 5.38 - 5.74 - (PH)



- 300Kg 5.75 - 6.12 - (PH) - 200Kg 6.13 - 6.49 - (PH) - 100Kg 6.50 - 6.75 - (PH) - 60kg உங்கள் தோட்டத்தில் உள்ள மண்ணின் ீஉ தன்மையை அறிந்து கொள்ள வேண்டும் என நீங்கள் நினைத்தால்உங்கள் தோட்டத்து மண் மாதிரிகளை சேகரித்து. உங்கள்மாவட்டத்தில் உள்ள விவசாய திணைக்களத்தில் சென்று கொடுத்தால். இலவசமாக மண்பரிசோதனை செய்து தருவார்கள்.

மண் பரிசோதனைக்காக மண் மாதிரிகளை சேகரிக்கும்முறை சம்பந்தமான கட்டுரையை அடுத்த பதிவில் நிச்சயம் பதிவிடுவோம். அதோடு டோலமைட் பயன்படுத்துவதற்கு அதிக செலவு ஏற்படும் என நினைக்கும் பட்சத்தில் விவசாயிகள் ஐயம் கொள்ள தேவையில்லை இதற்கு மாற்றீடாக செலவில்லாமல் இயற்கை விவசாயத்தின் ஊடாகவும் இயற்கை உரத்தின் ஊடாகவும் சமநிலைக்கு கொண்டுவர இயலும்.

## மண்பரிசோதனை செய்யும்முறை

விவசாயம் செழிக்கவும், விளைச்சல் அதிகரிக்கவும், மண்வளத்தை காக்கவும், விவசாயிகள் கண்டிப்பாக மண் பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும். விவசாயத்திற்கு அடிப்படைத் தேவைகளாக நிலவளம், நீர்வளம் அமைகின்றன. நிலத்தின் வளத்தை நிர்ணயிப்பதில் மண் பரிசோதனையே முக்கியமானதாகும். ஏன் என்றால் மண்ணின் ரசாயன குணங்களும், பயிருக்குக் கிடைக்கக் கூடிய சத்துக்களின் அளவையும் மண் பரிசோதனையின் மூலமாகவே அறிய முடியும். நிலத்துக்கு நிலம். சத்துக்களின் அளவு வேறுபடுவதாலும், மண் பரிசோதனையின் மூலமே பயிருக்கு ஏற்ப சமச்சீர் உரத்தை பரிந்துரை செய்ய முடியும். இந்த மண்பரிசோதனை ஊடாக விவசாயிகள் அதிக விளைச்சல் பெறவும் முடியும்.

அதோடு உரச் செலவை குறைக்கவும் முடியும். மண்ணிலுள்ள PH அதாவது கார அமிலத்தன்மையை அறிவதற்காகவே இந்த மண் பரிசோதனை செய்கின்றோம். விவசாயிகள் மண்ணின் உள்ள கார அமில தன்மையை ஆறிந்தால் மட்டுமே. எந்த அளவு உரம் இடவேண்டும். எதற்காக உரம் இடுகின்றோம் என்று அறிய முடியும். நம் விவசாயிகளில் அதிகமானோருக்கு தெரிவதில்லை. எதற்காக உரம் இடுகின்றோம். எந்த அளவில் உரம் இடவேண்டும் என்று.

### மண் மாதிரி எடுக்கும்முறை

நிலத்தின் தன்மைக்கு ஏற்ப ஒரே வகையான மண்ணாக இருந்தால் ஒரு பையில் மண் மாதிரிகளை சேகரிக்கலாம். ஒரு நிலத்தில் வெவ்வேறு வகையான




மண்ணாக இருந்தால் வெவ்வேறு பைகளில் மண் மாதிரிகளை சேகரிக்க வேண்டும். வயலின் மேடான பகுதிக்கு தனியாகவும், தாழ்வானப் பகுதிக்கு தனியாகவும். மண்மாதிரி எடுக்க வேண்டும். அதுபோன்று ஒரே வயலின் வெவ்வேறு பயிர்களை இரண்டாக முன்பு நடுகை செய்திருந்தாலும். மண் மாதிரிகளை வெவ்வேறாக சேகரிக்க வேண்டும்.

மண் மாதிரி எடுக்க முன்பு அம்மண்ணில் குறைந்தது மூன்று மாதத்திற்குள் எந்த ஒரு உரமும் பயன்படுத்திருக்கக்கூடாது. மண் மாதிரி எடுக்கும்போது தவிர்க்க வேண்டிய இடங்கள்: எரு குவித்த இடங்கள், வரப்பு ஓரங்கள், மரங்களின் நிழல் படரும் பகுதிகள், நீர் கசிவு உள்ள இடங்கள். பொதுவாக மண் மாதிரிகள் எடுக்கும்போது மூன்று வகை பயிருக்கான மண் மாதிரிகள் எடுக்கப்படுகின்றது.

1. நெல், ராகி,தினை, நிலக்கடலை, போன்ற குட்டை வேர் பயிர்களுக்கு 15 செமீ அல்லது 6 அங்குல ஆழத்தில் எடுக்க வேண்டும்.

2. பருத்தி,கத்தரி, மிளகாய், மரவள்ளி போன்ற ஆழமான வேர் பயிர்களுக்கு 22 செமீ அல்லது 9 அங்குல ஆழத்தில் எடுக்க வேண்டும்.

3. திராட்சை, மா, எலுமிச்சை, போன்ற பழத் தோட்ட மற்றும் தென்னை மரப்பயிர்களுக்கு 3 அடி ஆழத்துக்கு குழி தோண்டி அதில் முதல் அடியில் ஒரு மாதிரியும், 2-வது அடியில் ஒரு மாதிரியும், 3-வது அடியில் ஒரு மாதிரியும் என 3 மண் மாதிரிகளை தனித்தனியாக எடுக்க வேண்டும். மண் மாதிரி எடுக்க வேண்டிய இடத்தில் உள்ள இலை, சருகு, புல் முதலியவற்றை அகற்றி மேல் மண்ணிலிருந்து நடுகை செய்யும் பயிரைப் பொறுத்து மேற்கூறிய ஆழத்துக்கு நிலத்தில் இரும்பு குழாய் ஒன்றை குத்தி குழாய்க்குள் நிரம்பும் மண்ணினை பரிசோதனைக்காக பெற்றுக்கொள்ளலாம். ஒரு ஏக்கர் நிலத்தில் குறைந்தது 8 தொடக்கம் 12 இடங்களில் மண்ணை சேகரித்து ஒன்றாக கலந்து. அரை கிலோ மண் வரும்வரை பகுத்தல் முறையில் பிரித்து எடுத்து ஒரு பொலித்தீன் பையில் போட்டு பரிசோதனைக்கு கொடுக்க வேண்டும். மண் மாதிரிகளை அனுப்ப வேண்டிய இடம். உங்கள் மாவட்டத்தில் உள்ள விவசாயத் திணைக்களத்தில் உள்ள மண் பரிசோதனை ஆய்வு கூட பகுதிக்கு கொடுக்க வேண்டும்.

# சுடலை ஞானம்

**நல்லா ருசித்து வாழ்வது தான் வாழ்க்கை என்றாலும் உடல் ஆரோக்கியத்தை கவனிப்பதும் மிக முக்கியம். வளரும் தொழில்நுட்பக் காலத்தில் உணவு முறைகளும் மாறிக்கொண்டே வருகின்றது. ஒருசில உணவுகள் உடலுக்கு கேடு விளைக்கும் என நமது மூளை சொன்னாலும் நாக்கும் மனதும் அதை கேட்பதாக இல்லை. ஒருமுறை அதன் சுவை நாக்கில் ஒட்டிக் கொண்டால் அது தொடர்கதையாகிவிடும். இப்படி நாம் ருசித்து சாப்பிடும் பல உணவுகள் நமது உடல் ஆரோக்கியத்துக்கு எதிராக விளையாடி வருகிறது.**

ஆதிரா



உலகத்தில் வாழும் ஜீவராசிகள் அனைத்தும் பசி போக்கவும், உடல் வளர்ச்சிக்காகவும் உட்கொள்ளப்படும் உணவானது நாட்டுக்கு நாடு பல வித்தியாசமான வகையையும், சுவையையும் , தயாரிப்பு முறைகளையும் கொண்டிருக்கிறது,.

சில குறிப்பிட்ட உணவு வகைகள் மானுடங்களின் அடையாளங்களில் ஒன்றாகவே ஒன்றிப்போயிருக்கின்றன.. உணவின் தன்மையும், வகையும் மனிதர்களின் வித்தியாசப்படுத்தலில் ஒரு அங்கமாக திகழ்கின்றது என்று சொன்னால் மிகையாகாது.. ஈழத் தமிழ் மக்களிடையே ஒரு அடையாளமாக அல்லது பன்னெடுங் காலமாக பாவனையிலி ருப்பவையாக ஒரு சில உணவுகள் இருக்கின்றன. இந்த உணவு வகைகள் அவர்களது சம்பிரதாயங்களுடனோ அல்லது சமய வழிபாட்டுடனோ அல்லது கலாச்சாரத்துடனோ சம்மந்தப்பட்டவையாக தொடர்ந்து சந்ததி சந்ததியாக கடத்திவரும் விசயங்களில் ஒன்றாக இருக்கின்றன.

பச்சை இறைச்சியை வேட்டையாடி தின்ற அன்றைய மானுடத்தின் உணவு உட்கொள்ளலிருந்து இன்றைய சமைத்தல் முறை மூலம் உட்கொள்ளும் நவீன மாற்றங்கள் பல கண்ட பின்னாலும் நாம் எமது பாட்டி, பூட்டி காலத்தில் சமைக்கப்பட்ட அதே உணவுகளுடன் தான் அவர்களின் சந்ததியினருடன் பயணிக்கிறார்கள்

எத்தனையோ புது புது இடங்களுக்கு புலம் பெயர்ந்தாலும் அந்த நாட்டின் பருவ கால , சூழல் நிபந்தனைகளுக்குட்பட்டு அந்தந்த நாடுகளில் கிடைக்கும் உணவுகளுடன் வாழ்க்கையை செலுத்த வேண்டிய கட்டாயத்திலிருப்பினும் கூட சொந்த ஊரின் சமையல் முறையை எப்பாடுபட்டாவது இருக்கும் ஊரின் சூழலுக்குள் அவர்கள் கொண்டு வந்து விடுகிறார்கள். எத்தனையோ வகை வகையான புதிய புதிய சமையல் வகைகளை தெரிந்து கொண்டாலும் பிறந்து வளர்ந்த ஊரில் சாப்பிட்டு வாழ்ந்த உணவு வகைகளையே பிராதானப்படுத்துகின்றார்கள்.. அப்படி ஈழத்தமிழர்களுடன் சந்ததி சந்ததியாக தொடர்ந்து வரும் பல வகையான உணவு வகைகளில் பாரம்பரியம் மிக்க உணவுகள் பற்றிய தகவல்கள் இக்கட்டுரையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை தமிழர் உணவுப் பழக்கம் என்று கூறுவதனால்,இலங்கைத்தமிழர் அனைவரும் ஒரே மாதிரியான உணவுப் பழக்கத்தைக் கொண்டுள்ளனர் என்று கூறுவதற்கில்லை. ஏனைய பல சமுதாயங்களின் உணவுப் பழக்கங்களைப் போலவே இவர்களது உணவுப் பழக்கமும், அச்சமூகத்தின் பல்வேறு பிரிவினரிடையே பல அடிப்படைகளில், வேறுபடுவதைக் காணலாம். ஆனாலும், இவை அனைத்தையும், ஒன்றாகவே இயங்குகின்ற முழு இலங்கைச்சமுதாய அமைப்பின்கூறுகளாகப் பார்ப்பதன் மூலமே புரிந்து கொள்ளமுடியும்

இவற்றைவிட நாட்டின் புவியியல் அமைப்பு, வளங்கள், பல்வேறு வகையான வேளாண்மை உற்பத்திகளுக்கான வாய்ப்புக்கள், உணவுப்பொருள் தொடர்பான வணிகம் என்பனவும், நில உடைமை மற்றும் நிலப்பயன்பாட்டு நிலைமைகளும் உணவுப் பழக்கவழக்கங்களில் தாக்கங்களை உண்டாக்கும் காரணிகளாக இருக்கின்றன. இவற்றுடன், சமய நம்பிக்கைகளும் இன்னொரு முக்கிய காரணியாகும்

காலத்துக்குக் காலம் இந்நாட்டை ஆண்ட ஆட்சியாளர்களின், வேளாண்மை மற்றும் வணிகம் தொடர்பான கொள்கைகளும் போர் முதலியவற்றினால், ஏற்றுமதி செய்யும் நாடுகளிலிருந்து உணவுப் பொருட்களை இறக்குமதி செய்யமுடியாதிருந்த நிலைமைகளும்கூட உள்ளூர் உணவுப் பழக்கங்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை உண்டாக்கியுள்ளன.

நவீன மருத்துவத்தால் நம் ஆயுளை நீடிக்க முடிந்திருக்கிறதே தவிர, ஆரோக்கியமாக வாழவைக்க முடியவில்லை. நம் முன்னோர்களுக்கு உணவுதான் மருந்து. இதனால் நோய்நொடியில்லாமல் அவர்களால் ஆரோக்கியத்துடன் வாழ முடிந்திருக்கிறது. ஆனால், இப்போது மருந்துதான் உணவு. மூன்று வேளையும் சாப்பிடுகிறோமோ இல்லையோ, தவறாமல் மருந்துகளை உட்கொண்டு வருகிறோம். அடுக்களைகளில் சுவைச் சரக்குகளை வைப்பதற்கென முன்னர் அஞ்சறைப் பெட்டிகளை வைத்திருந்தோம். இப்போது, ஐந்து அறைகள் அல்ல, ஏராளமான அறைகளைக்கொண்ட மாத்திரைப் பெட்டிகளைத்தான் வைத்திருக்கிறோம்.

தமிழர்களுக்கெனத் தனித்துவமான உணவுப் பண்பாடு உள்ளது. அந்த உணவுப் பண்பாட்டைக் கைவிட்டு, பாரம்பரிய



உணவுகளில்இருந்து துரித உணவுகளுக்கு நாம் பெருமளவுக்கு மாறிவிட்டோம். இதுதான், மருந்து மாத்திரைகளுடன் நாங்கள் வாழவேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருக்கிறது. பாரம்பரிய உணவுகளுக்கு நாம்மீளவும் திரும்ப வேண்டும் நமது அன்றாட உணவில் ஒருவேளை உணவாவது பாரம்பரிய உணவாக இருக்க வேண்டும்.

இவை பரந்த அடிப்படையில், எல்லாப் பிரிவினரையும் பாதிக்கின்ற காரணிகளாக உள்ளன. அதே வேளை, சமூகப் பிரிவுகள் மட்டத்தில் காணப்படும் வேறுபாடுகளுக்கு அடிப்படையாகப் பின்வரும் காரணிகள் அமைகின்றன.

**சமூக அமைப்பு**
**தொழில்**
**பொருளாதார நிலை**
**சமூக அந்தஸ்த்து**

**வாழிடச் சூழல்** என்று பல்வேறுபட்ட காரணிகளால் பிரிந்து கிடந்தாலும் உணவு பழக்க வழக்கம் ஒன்று எம்மை எப்போதும் ஒன்று சேர்க்கின்றது .இது இப்படி இருக்க நாவிக்கும் மனதுக்கும் கட்டுப்பாடு இன்றி கண்டதை எல்லாம் உருட்டி வயிற்றுக்குள் அனுப்பி விட்டு தற்போது மிகவும் துன்பப் பட்டுக் கொண்டிருக்கின்ற பலரை நாங்கள் கண்கூடு பார்த்துக் கொண்டிருக் கின்றோம். உணவே மருந்து என்ற காலம் மாறி தற்போது மருந்துக்குப்பின் மருந்துக்கு முன் என்று உணவிற்கு கட்டுப்பாடு வைக்கின்ற நிலவரத்திற்கு நம்மை தள்ளி இருக்கின்றது இந்த நாவு.

உடலில் புற்றுநோய் அபாயத்தைத் தூண்டும் உணவுகள் சிலவற்றைக் காண லாம்.

## தீவிர பதப்படுத்தப்பட்ட உணவுகள்

தீவிர பதப்படுத்தப்பட்ட உணவுகளில் கொழுப்பு, ஸ்டார்ச் போன்ற பொருள்களின் சாறுகள் பயன்படுத்தப்படுகின்றன. மேலும், இந்த வகை உணவுகளில் பல்வேறு தீங்கு விளைவிக்கும் இரசாயனங்கள் பயன்படுத் தப்படுகிறது. இந்த உணவுகளைத் தொடர்ந்து எடுத்துக் கொள்வதால் உடல் பருமன் அதிகரிப்பு ஏற்படும் அபாயம் உண்டாகலாம். மேலும் இதில் எந்த ஊட்டச்சத்துக்களும் இல்லை. இது வீக்கம் மற்றும் ஆக்ஸிஜனேற்ற அழுத்தத்தை அதிகரிப்பதால், புற்றுநோய் அபாயத்தையும் அதிகரிக்கிறது.

## சிவப்பிறைச்சி

இன்று பலரும் சிவப்பிறைச்சியை விரும்பி உண்ணுகின்றனர். ஆனால் இது புரோஸ்டேட் மற்றும் பெருங்குடல் புற்றுநோயின் அபாயத்தை அதிகரிக்கிறது. அதிலும் குறிப்பாக பதப்படுத்தப்பட்ட அல்லது எரிக்கப்பட்ட இறைச்சிகளே புற்றுநோயைத் தூண்டுகிறது. மருத்துவர் மணீஷ் அவர்களின் கூற்றுப்படி, “சிவப்பிறைச்சி களை சமைக்கும் விதம் மிகவும் முக்கிய மாகும். பல நேரங்களில் சமைக்கும் போது சிவப்பிறைச்சியில் தனிமங்கள் உற்பத் தியாகலாம். இது புற்றுநோய் அபாயத்தை அதிகரிக்கலாம்.” என்று கூறியுள்ளார்.

## பதபடுத்தப்பட்ட இறைச்சி

இந்த வகை இறைச்சியில் நைட்ரேட்டுகள், நைட்ரைட்டுகள் போன்ற பல கூறுகள் உள்ளது. சமைக்கும் போது சூடுபடுத்தும் போது நைட்ரோசமைன் என்ற தனிமத்தை வெளியிடுகிறது. இது பெருங்குடல் மற்றும் வயிற்று புற்றுநோயின் அபாயத்தை அதிகரிக்கலாம். இந்த பதப்படுத்தப்பட்ட உணவை பெரியவர்களுக்கு மட்டுமல்லாமல், குழந்தைகளுக்கும் கொடுக்கக் கூடாது. மாற்றாக, குறைந்த கொழுப்புள்ள இறைச்சியை உட்கொள்ளலாம்.

## செயற்கை இனிப்புகள்

எந்த வகையான இனிப்புகளையும் அதிகளவு உட்கொள்வது உடல் ஆரோக் கியத்திற்கு தீங்கு விளைவிக்கலாம். குறிப்பாக, சர்க்கரை சார்ந்த பானங்கள் மார்பக மற்றும் வயிறு புற்றுநோயின் அபாயத்தை அதிகரிக்கிறது. பொதுவாக அதிகளவு சர்க்கரை உட்கொள்வது உடல் பருமனை அதிகரிப்பதுடன், இன்சுலின் எதிர்ப்பில் முக்கிய பங்கு வகிக்கிறது. எனினும், புற்றுநோய்க்கு சர்க்கரை எந்த அளவுக்குக் காரணம் என்பதை அறிய கூடுதல் ஆராய்ச்சி தேவைப்படுகிறது என டாக்டர் மணீஷ் சர்மா அவர்கள் கூறியுள் ளார்.

## மது அருந்துதல்

போதைப் பொருள்கள் அதிலும் குறிப் பாக மது அருந்துவது உடல் நலத்திற்கு எந்த வித பயனும் இல்லை. அளவுக்கு அதிகமாக மது அருந்துபவர்கள் பல்வேறு நோய்களைச் சந்திக்கும் நிலை ஏற்படலாம். மது அல்லது வேறு வகையான போதைப் பொருள்களை உட்கொள்வதால் பல்வேறு வகையான புற்றுநோய்களின் அபாயத்தை அதிகரிக்கிறது. இதில் மார்பக புற்றுநோய், பெருங்குடல் புற்றுநோய், உணவுக்குழாய் புற்றுநோய் போன்றவை அடங்கும். தினசரி மது அருந்துவது கல்லீரல் பாதிப்பையும் ஏற்படுத்தும். மேலும் இது ஹார்மோன் அளவுகளில் ஏற்படும் மாற்றங்களுக்கும் காரணமாகிறது.

காலம் காலமாக நமது முன்னோர் களுடைய பாரம்பரிய உணவுகளை தவிர்த்து நமக்கும் நமது சந்ததிக்கும் நாமே நஞ்சை விதைத்துக் கொண்டிருக் கிறோம் என்பது சுடலை ஞானம் தான் உண்மையில் காலம் எங்கோ போய் கொண்டிருக்கிறது நாங்கள் இன்னும் இப்படியே பேசிக் கொண்டிருக்கிறோம் என்று சிரிக்கின்றவர்களுக்கு இப்போது எதுவும் புரிந்து கொள்ளப் போவது இல்லை காலம் காலமாக நமது கட்டுப்பாட்டுக்குள் நமது சுய ஒழுக்கத்துக்குள் நமக்கென்ற வரையறைக்குள்வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள் நாம் ஆனால் இப்போது எங்கெங்கோ ஏதேதோ பழக்க வழக்கங்களுக்கும் கலாச்சாரங்களுக்கும் பழக்கப்பட்டு நம்மை நாமே இழந்து கொண்டிருக்கிறோம் ,நமது சுயத்தை இழந்து கொண்டிருக்கிறோம் என்கின்ற உண்மை எப்போதாவது எங்களுக்கு புலப்படும் போது அது சுடலை ஞானமாக தான் இருக்கின்றது. காலம் எங்களுக்கு இசங்கி சில வேளைகளில் சில சந்தர்ப்பங்களை தருகின்றது அந்த காலங்களில் ஆவது நாங்கள் எங்களு டைய பாரம்பரியங்களுக்கு மாறி நமது உணவு களை சுவைக்கவும் அவை பற்றிய அறிமுகத்தை எமது அடுத்த சந்ததிக்கு வழங்கவும் தயாராகுவது நம் அனைவரதும் தலையாய கடமை ஆகும்.

# தொழில் நுட்ப வளர்ச்சியால் உருவாகும் புதிய வேலைகள்

**அதிக போட்டி நிலவும் தொழிலாளர் சந்தையில் நிலைத்திருக்க ஒருவர் தொடர்ந்து புதிய திறன்களைத் தேர்ந்தெடுத்துக் கற்க வேண்டும். அதோடு, ஏற்கெனவே உள்ள திறன்களை மேம்படுத்த வேண்டும். எதிர்காலத்தில் வளர வாய்ப்புள்ள 5 துறைகளும் காணாமல் போகும் வேலைகளும் என்ன? அதற்காக வளர்த்துக் கொள்ள வேண்டிய திறன்கள் என்ன? இந்தக் கட்டுரையில் அவற்றைப் பார்க்கப்போகின்றோம்**

ஓலெக் கார்பியாக்



தொழிலாளர் சந்தை முன்னெப்போதையும்விட வேகமாக மாறி வருகிறது. இப்போது நடைமுறையில் இருக்கும் பல வேலைகள் நாளை இல்லாமல் போகலாம்.

உலகப் பொருளாதார மன்றத்தின் (World Economic Forum) சமீபத்திய ஆய்வுப்படி, தொழிலாளர் சந்தையில் இரண்டு முக்கியக் காரணிகள் மாற்றங்களுக்கு வழிவகுக்கின்றன.

மீப்பெரும் தரவு (Big Data), கிளவுட் கம்ப்யூட்டிங், செயற்கை நுண்ணறிவு போன்ற புதிய தொழில் நுட்பங்களில் ஏற்படும் விரைவான முன்னேற்றம் தொழிலாளர் சந்தையில் மிகப்பெரிய மாற்றங்களை கொண்டு வரும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

இதில் நல்ல செய்தி என்னவென்றால், புதிய தொழில்நுட்பங்களின் வருகை ஒட்டுமொத்த பொருளாதாரத்திற்கும் ஓர் உத்வேகத்தை அளிக்கும். சில வேலைகளை அழித்து, பல வாய்ப்புகளை உருவாக்கும். எல்லாவற்றுக்கும் மேலாக, ஒரு வணிகம் குறைவான வளங்களைக் கொண்டு அதிக உற்பத்தியை அடையும் போது அது இயல்பாகவே விரிவடைகிறது.

உலகப் பொருளாதார மன்றத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், அடுத்த ஐந்து ஆண்டுகளில் தற்போது இருக்கும் தொழில்களில் கிட்டத்தட்ட கால் பகுதி மாறிவிடும் என்று கூறுகிறார்கள்.

அதிக போட்டி நிலவும் தொழிலாளர் சந்தையில் நிலைத்திருக்க ஒருவர் தொடர்ந்து புதிய திறன்களைத் தேர்ந்தெடுத்துக் கற்க வேண்டும். அதோடு, ஏற்கெனவே உள்ள திறன்களை மேம்படுத்த வேண்டும். எதிர்காலத்தில் வளர வாய்ப்புள்ள 5 துறைகளும் காணாமல் போகும் வேலைகளும் என்ன? அதற்காக வளர்த்துக் கொள்ள வேண்டிய திறன்கள் என்ன?

தொழில்நுட்ப ரீதியான கல்வியறிவு என்பது புதிய வேகமெடுக்கும் தொழிலாளர் சந்தையில் போட்டியிடுவதற்கான முக்கியத் திறன்களில் ஒன்று.

அதற்காக எல்லோரும் நிரல் தொகுப்பு மொழி (Programming language) பயில வேண்டும் அல்லது இயந்திர கற்றலின் நுணுக்கங்களைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று அர்த்தமில்லை.

ஆனால் எதிர்காலத்தில், STEM சார்ந்த வேலைகளுக்கான தேவை அதிகமாக இருக்கும் என்று நம்பப்படுகிறது.

'STEM' என்பது அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம் ஆகியவற்றின் தனித்துவமான, ஆனால் தொடர்புடைய தொழில்நுட்பத் துறைகளை ஒன்றிணைக்கப் பயன்படுத்தப்படும் ஒரு சொல். (Science,Technology,Engineering and Math - STEM)

எனவே, எதிர்காலத்துக்கு ஏற்றவாறு உங்கள் குழந்தை பள்ளியில் எந்தெந்தப் பாடங்களில் கவனம் செலுத்த வேண்டும் என்று நீங்கள் யோசித்தால் இதோ அதற்கான பதில்: கணிதம், கணினி அறிவியல் மற்றும் அறிவியல்.

அடுத்ததாக நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம்: பகுப்பாய்வு சிந்தனைத் திறன் (analytical thinking). அதை மேம்படுத்த, ஒருவர் அறிவாற்றல் திறன்களை மெருகூட்ட வேண்டும். வேறுவிதமாகச் சொல்ல வேண்டுமெனில், ஒரு விஷயத்தை பகுப்பாய்வு செய்யும்போது அதன் வடிவங்களைக் கூர்ந்து கவனிக்கும் திறன் வேண்டும். நம் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு தகவல்களை ஆராய்ந்து முடிவுகளை எடுக்க வேண்டும்.

பகுப்பாய்வுத் திறனை மேம்படுத்த, நீங்கள் கவனமாக எல்லாவற்றையும் உற்றுநோக்க கற்றுக் கொள்ள வேண்டும். ஏனென்றால் கேட்ஜெட்டுகள், சமூக ஊடகங்கள், ஒன்லைன் கேம்கள் மற்றும்

விளம்பரங்கள் தொடர்ந்து நம் கவனத்திற்காகப் போராடுகின்றன. மேலும் தகவல்களைத் தவறவிடும் பயத்தை ஒருவருக்குத் தூண்டுகின்றன. இதை குழுஆமு, அல்லது "fear of missing out" என்பர்.

பகுப்பாய்வுத் திறனை மேம்படுத்த ஆர்வம் மற்றும் சுய அறிவை வளர்த்துக் கொள்ளுதல் முக்கியப் பங்கு வகிக்கும். தொடர்ந்து கற்றுக் கொள்ளும் ஆர்வம் இருக்க வேண்டும். நீங்கள் உங்கள் இலக்கில் கவனம் செலுத்த வேண்டும்.

ஆங்கிலத்தை உயர்மட்ட நிலைக்கு ஏற்றவாறு கற்றுக் கொள்வது மிகவும் மதிப்புமிக்க திறமையாகும்.

படைப்பாற்றல் மிகவும் முக்கியம். அறிவியல், பொறியியல், வடிவமைப்பு அல்லது கலை ஆகியவற்றில் தொழில்நுட்பக் கல்வி அறிவைப் படைப்பாற்றலுடன் இணைத்து நிர்வகிக்கும் நபருக்கு கண்டிப்பாக அசத்தலான பதவி உயர்வு கிடைக்கும்.

குறிப்பாக செயற்கை நுண்ணறிவு காலகட்டத்தில் தொடர்பு மற்றும் ஒத்துணர்வு (empathy) ஆகியவை இரண்டும் மிக உயர்ந்த மதிப்புமிக்க திறன்களாக இருக்கும்.

இயந்திரங்கள் எவ்வளவு வேகமாக மேம்பட்டாலும், மனிதர்களுக்கு எப்போதும் சக மனிதர்களின் தேவை இருக்கும். கவனம், குழுவாக இணைந்து பணி செய்யும் திறன், கேட்கும் திறன், கதை சொல்லும் திறன், ஆதரவு, அனுதாபம் ஆகிய பண்புகள் அதிகமாக மதிக்கப்படும்.

கடந்த 2020இல் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையின்படி, தொழில் வல்லுநர்களுக்கான சமூக ஊடகமான டுinமெனஇஐ இல், தகவல் தொடர்பு என்பது இன்றைய தொழிற்சந்தையில் மிகவும் தேவைப்படும் திறனாக மாறியுள்ளது.

"பணியிடத்தில் செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் ரோபாட்டிக்ஸ் பயன்பாடு, வளர்ந்து வரும் தொலைதூரப் பணியாளர் முறை மற்றும் தொழில்நுட்பம் ஆகியவை உலகெங்கிலும் உள்ள மக்களுடன் தொடர்பு கொள்ள அனுமதிக்கின்றன. ஒருவருக்கொருவர் எவ்வாறு தொடர்பு கொள்வது, மற்றவர் சொல்வதைக் கேட்பது மற்றும்உறவுகளைஎவ்வாறுஉருவாக்குவது என்பதைக் கற்றுக்கொள்வது இதற்கு முன் எப்போதும் மிக முக்கியமானதாக இருந்ததில்லை. ஆனால் இனி இது அவசியம்" என்று பணியிடத் திறமை மற்றும் உரையாடல் நிபுணர் டான் நெக்ரோனி கூறுகிறார்.

தகவல் தொழில்நுட்பங்கள் மற்றும் புதிய தொழில்நுட்பங்கள் எதிர்காலத்தில் மிகவும் நம்பிக்கைக்குரிய தொழில்களில் ஒன்றாக இருப்பதில் ஆச்சரியமில்லை. செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திர கற்றலின் வளர்ச்சி அதிக வேலை வாய்ப்புகளைக் கொண்டு வரும்.

இந்தத் துறையில் நம்பிக்கைக்குரிய எதிர்காலத் தொழில்களில் ஒன்று, ப்ராம்ட் இன்ஜினியரிங் (prompt engineer). இத்துறை நிபுணர்கள் செயற்கை நுண்ணறிவு மாதிரிகளுடன் தொடர்பு கொண்டு, அதன் தேவையானவற்றை சரியாக உருவாக்கவும், செயற்கை நுண்ணறிவுக்கும் மக்களுக்கும் இடையில் ஒரு வகையான இடைத்தரகராகச் செயல்படவும் உதவுவார்கள்.

செயற்கை நுண்ணறிவு தொடர்பான பிற சாத்தியமான வேலைகளில் நெறிமுறைவாதி (ethicists) பணியும் அடங்கும். அதாவது நெறிமுறைகள், பாதுகாப்பு பொறியியல் மற்றும் மனித-இயந்திர தொடர்புக்கான பயனர்நட்பு இடைமுகங்களை உருவாக்கும் பணிகளைச் செய்வது ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்ற நபர்.

செயற்கை நுண்ணறிவைப் பொறுத்தவரை, பிற தொழில்களைச் சேர்ந்தவர்கள் அதை ஒரு போட்டித் தொழிலாக கருதக் கூடாது. ஒரு கூட்டாளராக உணரவும், அதனுடன்எவ்வாறு ஒத்துழைக்க வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

முக்கியத்துவம் பெறும் மற்றொரு துறை, பெரிய தரவுகளின் பகுப்பாய்வு (analysis of big data), இது ஹாட்ரான் மோதல் (Hadron Collider) அல்லது கட்டுப்பாட்டு அமைப்புகளில் இருந்து நெட்ஃபிக்ஸ் போன்ற இணைய தளங்கள் வரையிலான தகவல்களின் தொகுப்பாகும்.

இணையப் பாதுகாப்பு நிபுணர்களுக்கு நிச்சயமாக வேலைக்குப் பஞ்சம் இருக்காது. ஏனென்றால் நம்மைச் சுற்றி மிகவும் முக்கியமான தகவல்கள் நிறைந்துள்ளன, அவற்றைப் பாதுகாப்பது முக்கியமான ஒன்று.

நிதி தொழில்நுட்பங்களில் வல்லுநர்கள், வணிக ஆய்வாளர்கள் மற்றும் பிளாக்செயின் அமைப்புகளை உருவாக்குபவர்களின் தேவையும் அதிகமாக இருக்கும்.

உலகப் பொருளாதார அமைப்பின் 2023 வேலை வாய்ப்பு அறிக்கைப்படி, பசுமை வேலைகளுக்கான தேவை, துறைகள் மற்றும் தொழில்களில் வேகமாக வளர்ந்து வருகிறது.

"உலகளவில், சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல், 2030ஆம் ஆண்டிற்குள் தூய ஆற்றல், செயல்திறன் மற்றும் குறைந்த உமிழ்வு தொழில்நுட்பங்களில் 30 மில்லியன் வேலைகள் உருவாகலாம்" என்று அறிக்கை கூறுகிறது.

இப்போதைக்கு, பசுமை ஆற்றல் மற்றும் நிலையான வளர்ச்சியில் புதிய வேலை வாய்ப்புகளில் முன்னணியில் இருப்பது மேற்கத்திய நாடுகள் மற்றும் ஜப்பான். சீனாவும் படிப்படியாக இத்துறையில் வளர்ந்து வருகிறது.

இந்த வேலைகள் வணிகம், அறிவியல், அரசியல் அல்லது நேரடியாக சுற்றுச்சூழலுடன் தொடர்புடையதாக இருக்கலாம். புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அல்லது புதிய எரிசக்தி ஆதாரங்கள் மற்றும் பேட்டரிகளின் வளர்ச்சியில் பணிபுரியும் துறைகளுக்குள் இருக்கலாம். அழிந்து வரும் உயிரினங்களைப் பாதுகாத்தல், வணிக ஆலோசனை கொடுப்பது ஆகிய துறைகளும் இதில் அடங்கும்.

நகர்ப்புறத் திட்டமிடுபவர்கள், கட்டடக் கலைஞர்கள், வடிவமைப்பாளர்கள் மற்றும் ஸ்மார்ட் வீடுகளை உருவாக்குபவர்களின் தேவையும் அதிகமாக இருக்கும்.

உலக மக்கள் தொகை அதிகரித்து வருகிறது. மக்களின் ஆயுட்காலம் அதிகரித்து வருகிறது. மக்களுக்கான கவனிப்பும் சிகிச்சையும் இன்னும் அதிகமாகத் தேவைப்படும். எனவே, எதிர்காலத்தில் மருத்துவ நிபுணர்களுக்கும் தேவை அதிகமாக இருக்கும்.

நோயாளிக்கு மருந்து மட்டுமல்ல, தார்மீக ஆதரவையும் வழங்கும் மருத்துவ ஊழியர்கள் மதிப்பு மிக்கவர்களாகப் பார்க்கப்படுவார்கள். மருத்துவர்கள் மற்றும் சுகாதார நிபுணர்கள் தொடர்ந்து புதிய நோயறிதல் மற்றும் சிகிச்சை முறைகளைக் கற்றுக்கொள்ள வேண்டும். இதற்கு செயற்கை நுண்ணறிவும் உதவியாக இருக்கும்.

உளவியலாளர்கள் மற்றும் தனிப்பட்ட வளர்ச்சியின் பல்வேறு வழிகாட்டிகள் அல்லது ஆன்மீக நடைமுறைகளைப் பயிற்றுவிப்பவர்களுக்கும் தேவைகள் இருக்கும்.

மெக்கானிக், ரிப்பேர்மேன், எலக்ட்ரீஷியன் அல்லது பில்டர்கள் போன்ற கைத்தொழில் செய்பவர்களுக்கான தேவை இனி வரும் ஆண்டுகளில் அதிகரிக்கும்.

வெவ்வேறு சூழ்நிலைகளில் சிறிய மற்றும் துல்லியமான பணிகளைச் செய்வது அவசியமானால், இயந்திரங்களைக் காட்டிலும் மனிதர்களின் தேவை ஈடுசெய்ய முடியாததாக இருக்கும்.

ஆனால் இந்த வல்லுநர்கள் தங்கள் தொழில்நுட்ப அறிவைத் தொடர்ந்து மேம்படுத்த வேண்டும் மற்றும் புதிய ஸ்மார்ட் கருவிகளில் தேர்ச்சி பெற வேண்டும்.

விவசாயத்தில் புதிய தொழில்களுக்கான தேவையும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மக்கள் தொகை அதிகரித்து வருகிறது, எல்லோரும் சாப்பிட வேண்டும். ஆனால் விவசாயிகளைவிட திறமையான பொறியாளர்களுக்கான தேவை அதிகமாக இருக்கும்.

# நம்மைச் சுற்றியிருப்பவர்களை முதலில் புரிந்துகொள்ளுங்கள்

**மனிதர்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெற சில விதிகள் உள்ளன. அந்த விதிகளைப் பற்றி அறிந்துகொண்டால் நாம் வெற்றிகரமான வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முடியும்**

“நாமும் நம்மைச் சுற்றியுள்ள அனைவரும் சிறப்பாகச் செயல்பட்டு வெற்றிகரமாக இருக்கும்போது, அது நம் அனைவருக்குமே நன்மை பயப்பதாக இருக்கும். இயல்பாகவே மனிதர்களாகிய நாம் மற்றவர்களுக்கு சிறந்த முறையில் உதவவும், மற்றவர்களிடம் இருந்து சிறந்த உதவி யைப் பெறவும் விரும்புபவர்களாக இருக்கிறோம். இந்த இரண்டு விஷயங்களும் சரி வர நடக்க வேண்டும் எனில், முதலில் மற்றவர்கள் எதனால் நமக்கு உதவி செய்ய முன்வருகிறார்கள் என்று தெரிய வேண்டும். இதைத் தெரிந்து கொண்டால், இரண்டு விஷயங்களில் நமக்கு லாபம் கிடைக்கும். ஒன்று, நம்மாலும் மற்றவர்களுக்கு சிறப்பாக உதவி செய்து, ஆதரவையும், ஒத்துழைப்பையும் தரமுடியும். மற்றவர்களிடமிருந்து அபரிமிதமான அளவில் ஆதரவையும் ஒத்துழைப்பையும் நம்மாலும் பெறமுடியும்.


ஓர் உதாரணத்தைப் பார்ப்போம். உங்களிடம் கார் இருக்கிறது. அது திடீரென்று மக்கர் செய்கிறது. கார் இன்ஜின் குறித்து ஏதாவது கொஞ்ச நஞ்சமாவது தெரிந்திருந்தால்தான் பானட்டைத் திறந்து பார்க்க முடியும். கார் இன்ஜின் குறித்து ஒன்றும் தெரியா விட்டால் பிரச்னை மிக மிகச் சிறியதாக இருந்தாலுமே அதை நம்மால் சரிசெய்ய முடியாது இல்லையா?

அதுபோல்தான். மனிதர்களைக் கையாளுவதும். மனிதர்களிடமிருந்து சிறந்த ஒத்துழைப்பைப் பெற அவர்கள் குறித்து நாம் கொஞ்சம் தெரிந்தும் புரிந்தும் வைத்திருக்க வேண்டும்.

‘மனிதர்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெற சில விதிகள் உள்ளன. அந்த விதிகளைப் பற்றி அறிந்துகொண்டால் நாம் வெற்றிகரமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியும்’’ என்று ஆரம்பிக்கிறது ‘ரூல்ஸ் ஆஃப் தி பீப்பிள்’ (Rules of People) என்னும் புத்தகம்.

மனிதர்களின் இயல்பைப் புரிந்து கொண்டு, மற்றவர்களின் உதவியைப் பெற்று வாழ்வை வளமாக்கிக்கொள்ள உதவும் இந்தப் புத்தகத்தை யுனைடெட் கிங்டமைச் சேர்ந்த ரிச்சர்ட் டெம்ப்ளர் (Richard Templar) எழுதியிருக்கிறார்.

“குழந்தையாய் ஒரு மனிதன் இருக்கும் போது மனிதர்கள் சில விதமான விதிகளுக்குக் கட்டுப்படுவார்கள். அதே குழந்தை பதின்மவயதை எட்டும்போது விதிகள் மாறும். பிற்பாடு, வயது வந்த ஆளாக உருவெடுத்த பின்னால் இன்னமுமே விதிகள் மாற்றம் பெறும். இந்த மாற்றத்தையும் நீங்கள் புரிந்துகொண்டு செயல்பட வேண்டும்.





இதில் ஒரு பெரிய அறிவியல் ரகசியம் என்று ஒன்றும் இல்லை. பல விஷயங்கள் சரியான பொதுப் புத்தியாகத்தான் இருக்கின்றன.

ஒரு விஷயம் உங்களை ஏன் ஏக்கமான மன நிலைக்குக் கொண்டு செல்கிறது, சில விஷயங்கள் உங்களுக்கு ஏன் மன அழுத்தத்தைத் தருகின்றன, ஏன் சில விஷயங்கள் நடந்தால் நீங்கள் குதூகலிக்கிறீர்கள், ஏன் சில நேரங்களில் யார் மீதும் எதன் மீதும் நம்பிக்கை இல்லாமல் இருக்கிறீர்கள், ஏன் சில விஷயங்களில் சுற்றி இருப்பவர்கள் நம்பிக்கையை மொத்தமாக இழந்த நிலையிலும் நீங்கள் அதீத நம்பிக்கை யுடன் இருக்கிறீர்கள்... எனப் பல கேள்விகள்...

இதற்கெல்லாம் மரபியல் காரணமாக இருக்கலாம். உங்களுடைய முந்தைய மோசமான அனுபவங்களால் இருக்கலாம். உங்களுடைய செயல்பாட்டுக்கு ஏற்றாற்போல் உங்களுடைய நண்பர்கள், ‘இதுக்குப் போய் இப்படி மனஅழுத்தம் கொள்ளாதே சுயாதீனமாக விடு எதிலும் கொஞ்சம் நம்பிக்கை வை எதற்கெடுத்தாலும் சந்தேகப்படாதே’ என்றெல்லாம் அட்வைஸ் செய்வார்கள்.

இது நம் அனைவருக்கும் பொதுவானது. இந்தப் பூமியில் வாழ்க்கையின் தனிப்பட்ட அனுபவத்தை அடிப்படையாக வைத்து எதிர்காலத்தில் தன்னுடைய செயல்பாடுகளைக் கட்டமைத்துக்கொள்ளாத ஆட்களே இல்லை. எனவே அடுத்த முறை, நன்கு பழகிவந்த உங்களுடைய சகபணியாளர் திடீரென்று எதிரியாக மாறும்போதோ, உங்களுடைய உயிர் நண்பர் உங்கள் இக்கட்டான சூழ்நிலையில் கைவிடும் போதோ, உங்களுடைய இணை உங்களுடைய பிறந்த நாளை மறக்கும்போதோ, இவற்றுக்கெல்லாம் ஏதோ ஒரு காரண காரியம் இருக்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். அது மிக மிகச் சிறிதாகவோ, முட்டாள்தனமானதாகவோகூட இருக்கலாம்.

ஆனால், அதை நீங்கள் புரிந்துகொள்ள முயன்றீர்கள் எனில், மற்றவர்களை இலகுவாக உங்களால் கையாள முடியும். ஒருவேளை, அவர்கள் மோசமான நடத்தை உடையவர்கள் என்றால், அதை மாற்றமுடியாவிட்டாலுமே காரணத்தைப் புரிந்துகொண்டால், உங்களால் சுலபமாக




அதைக் கடந்துசெல்ல முடியும்.

மற்றவர்களின் உதவிகளை இலகுவாகப் பெற வேண்டுமா..? இந்த விஷயங்களை மனதில் வைத்துக்கொள்ளுங்கள் மக்களே!

உங்களுடன் பணி புரியும் சக பணியாளர்ஒருவர்சாதாரணமதிய உணவுடன்கூடிய கூட்டத்துக்கு அல்லது வேறு சந்திப்புக்கு அழைத்தால் அந்தக் கூட்டத் துக்கும் தாமதமாகச் செல்லக் கூடாது என்பதில் பதைபதைப்பவராக இருந்தால் அதற்கு என்ன காரணம் இருக்கலாம் என்று யோசியுங்கள்.

அவருடைய அப்பா, சிறுவயதில் நேரம் தவறாமையைக் கடைப்பிடிக்கச் சொல்லி கண்டிப்புடன் அவரை வளர்த்திருக்கலாம்.

கடைசியாக, அவர் பணிபுரிந்த நிறுவனத்தில் அவர் நேரம் தவறாமையை அனுசரிக்க தவறியதால் கிடைக்க வேண்டிய பதவி உயர்வு அவருக்குக் கிடைக்காமல் போயிருக்கலாம். அவர் எந்த விஷயத்திலும் காலம் தவறாமையைக் கடைப்பிடிப்பவராகவும் இருக்கலாம்.

மேலே சொன்ன டென்ஷன் நபர் உங்கள் கூட்டாளியாக இருந்தால் பரவாயில்லை. உங்களுடைய மேலதிகாரியாக இருந்தால் என்னவாகும்?

அவர் டென்ஷன் ஆவதுடன் உங்களையும் டென்ஷன் ஆக்கி விடுவார்தானே? உங்களுடைய அதிகாரியின் அந்த டென்ஷனால் நீங்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காவது நீங்கள் அதன் பின்னணியைத் தெரிந்துகொள்ள வேண்டும்'' என்று சொல்லும் ஆசிரியர், தொடர்ந்து சூழல் மற்றும் உளவியல் விஷயங்களைச் சொல்லி நடைமுறை வாழ்வின் முக்கியத்துவம் குறித்து விளக்கு கிறார்.

உங்களைப்போல மற்றவர்களும் இருக்க வேண்டும் என்பதில்லை. நீங்கள் எதைப் பற்றியும் கவலைப்படாத நபராக இருக்கலாம். உதாரணமாக, மேசையில்/ பைல்களைக் குவித்து வைத்துக் கொண்டும் எதையும் எடுத்த இடத்தில் திருப்பி வைக்காமல்இருப்பவராக இருக்க லாம்.

உங்களுடைய அடுத்த மேசையில் இருக்கும் நபரோ மேசையை சுத்தமாகவும் எடுத்த பொருளை எடுத்த இடத்தில் (பேனா, ஹோல் பஞ்சர், பேப்பர் க்ளிப் என) தவறாமல் வைத்தும் ஈ-மெயில்களுக்குக்கூட முக்கியம், அவசரம், சாதாரணம் என கலர் கோடுகள் கொடுத்து வைத்துக்கொண்டும் இருப்பவராகவும், கொஞ்சம்கூட இது குறித்த ஒழுங்கின்மைகளைச்சகித்துக்கொள்ளாதவராகவும்கூட இருக்கலாம்.

உங்களுக்கு எதிர் மாறான குணம் கொண்ட நபரில்லையா? சரி, ஓர் அவசரச் சூழல் எனில், உங்கள் இருவரில் யாரால் ஒரு முக்கியமான ஈ-மெயிலைக் கண்டு பிடிக்க முடியும்... அவரால்தானே..?

இது மட்டுமா, ஏதாவது ஒரு நிகழ்வுக்குத் தயாராகும்போது யாரால் இதையெல்லாம் வேண்டும் என்று சரிபார்த்து பிழை இல்லாமல் எடுத்துச் செல்ல முடியும்? பெரிய நிகழ்வுகளை எந்தக் குறையும் இல்லாமல் யாரால் நடத்தித் தர முடியும்?

யார் எல்லா கூட்டங்களுக்கும் சரியான நேரத்தில் கலந்துகொண்டு, மீட்டிக்குக்கு பேப்பர் எடுத்து வராதவர்களுக்கு பேப்பர் கொடுத்து உதவி செய்து செயல்பட முடியும்? ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடிக்கும் அவரால்தானே!

நீங்கள் சூப்பர் ஐடியா கொடுக்க முடிந்த அதிகாரியாக இருக்கலாம். ஆனால், அவர் உங்களை மாதிரி இல்லாவிட்டாலும், உங்களால் சற்றும் செய்ய முடியாத வேலைகளை சூப்பராகச் செய்து முடிக்கும் வல்லமை கொண்டராக இருப்பார் இல்லையா?!

ஆக, ஒரு நிறுவனத்துக்கு நீங்களும் முக்கியம் அவரும் முக்கியம் என்பதைப் புரிந்து கொண்டு செயல்பட்டால், நீங்கள் சிறப்பாக செயல்பட முடியும் என்பதில் சந்தேகமே இல்லை.

ஐடியாக்கள் எவ்வளவு முக்கியமோ, அதைச் செயல்படுத்தும் ஒழுங்குபடுத்தல் திறனும் முக்கியம். ஆனால், நாம் எப்போதுமே நம்மிடம் இருக்கும் திறமைதான் சிறப்பானது என்ற எண்ணம் கொண்டிருப்போம்.

அட, அதையெல்லாம் விடுங்கள். நீங்கள் மிகவும் பிரசித்திபெற்ற ஒரு பற்பசையை உபயோகிக்கிறீர்கள்.

அலுவலக நண்பருடைய வீட்டில் தங்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கும்போது அவருடைய வீட்டில் மற்றொரு பிராண்ட் (அதிகம் பிரசித்திபெறாத) உபயோகிகிறார்கள். நீங்கள் என்ன நினைப்பீர்கள்? நீங்கள் உபயோகிக்கும் பிராண்ட்தான் சிறந்தது என்று தானே! அவர் அந்த பிராண்டை சிறந்தது என்று நினைக்கிறார். அவ்வளவுதான் அதில் உள்ள விஷயம்.

உங்களுக்குப் பிடிக்காத விஷயம் ஊருக்கே பிடிக்கக் கூடாது என்று நினைப்பதுதான் இதில் தவறான விஷயமே. உங்களுக்கு ஒரு விஷயம் பிடிக்காது என்பதால் அது மோசமானதோ, தவறானதோ இல்லை என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்" என்கிறார் ஆசிரியர்.

"மக்கள் அவர்கள் எவற்றைக் கேட்க விரும்புகிறார்களோ அதை மட்டுமே காதில் போட்டுக் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட சூழலில் வளவள என்று பேசாமல் மக்கள் எதைக் கேட்க விரும்புகிறார்களோ, அதைக் கண்டறிந்து சுருக்கமாகச் சொன்னால் அது மிகப் பெரிய அளவில் அவர்களைச் சென்றடையும் இல்லையா? அதே போல், மக்கள் தாங்கள் எதை சரி என்று நினைக்கிறார்களோ, அதையே முழுமையாக நம்புகிறார்கள்'' என அழுத்தமாகச் சொல்கிறார் ஆசிரியர்,

மனிதர்களைப் புரிந்துகொள்வது, மனிதர்களுக்கு உதவுவது, மனிதர்களை உங்களுக்கு ஆதரவாகச் செயல்படச் செய்வது, கடினமான மனிதர்களைக் கையாளுவது என்ற நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரித்து அதற்கான ரூல்ஸ்களை விளக்கமாகத் தந்துள்ளார்.

ஆராய்ச்சி முடிவுகள், நிஜவாழ்க்கை அனுபவங்கள் எனப் பல்வேறு சுவாரஸ்யமான விஷயங்களை மேற்கோள காட்டி இந்த விதிகள் விளக்கப்பட்டுள்ளன என்பது இந்தப் புத்தகத்தின் தனிச் சிறப்பாகும்.

மனிதர்களின் இயல்பைப் புரிந்து கொண்டு வாழ்ந்தால் அது நமக்கும் நம்மைச் சுற்றி இருப்பவர்களுக்கும் நல்லது என்பதால், அனைவரும் இந்தப் புத்தகத்தைப் படித்து மகிழ்ச்சியுடன் வாழ முயற்சி




இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.08.2024இல் வெளியிடப்பெற்றது.